# வேலைக்காரி



ஆசிரியர்:
நாரண - துரைக்கண்ணன்
"ஜீவா"





பிரசுரம்:
முத்தமிழ் நிலையம்
5, வரதா முத்தியப்பன் தெரு, சென்னை 1.

தற் பதிப்பு
947 ௵ மார்ச்சுமீ
000 பிரதிகள்

விலை ரூ. 1—8—0

Published by
M. CHAKRAVARTI NAINAR
C. I. P. House,
Q. H. M. S. 459, Madras.



Printed at the Veekay Printers, Swami Naicken St.,
Chintadripet, Madras.—Q. H. No. M. S. 522.

# முன்னுரை

இலக்கிய உலகிலும், பத்திரிகை உலகிலும் நிலவி வரும் அவலமான ஒரு நிலையைக் குறித்து நினைக்கும்போதெல்லாம் நான் ஓர் எழுத்தாளனாகவும், பத்திரிகாசிரியனாகவும் ஆகிவிட்ட துரதிர்ஷ்டத்தை எண்ணி யெண்ணிப் பலகால் வருந்துவதுண்டு.

சகோதரப் பத்திரிகாசிரியர்கள், எழுத்தாளர்கள் பலரிடையே நிலவி வரும் பொறாமை, போட்டியுணர்ச்சி, பத்திராதிபர்கள், பிரசுரகர்த்தர்கள் பலர் சன்மானம் அளிக்கும் விஷயத்தில் கையாளும் சூழ்ச்சி முறைகள் முதலியவைகளைக் கவனிக்கும்போது, சதா சிந்தனையால் உள்ளமும், உடம்பும் வெதும்பி வாடும் பத்திரிகாசிரியனாய், எழுத்தாளனாய் வந்ததைவிட, உழவனாய்,தொழிலாளியாய்ப் போயிருந்தாலும் மேற்குறித்த சிறுமைகளால் பாதிக்கப் படாமல் நிர்விசாரமாக வாழலாமே என்று நினைக்கத்தான் தோன்றும்.

மனத்துக்கு வேதனை தரும் இவ்விதச் சோதனை மிகுந்த சந்தர்ப்பங்களில் என்னைப் பத்திரிகைத் துறையில் பிரவேசிக்கச் செய்து நிரந்தரமாக எழுதியே பிழைக்க வேண்டுமென்ற நியதியை உண்டாக்கி விட்ட மூன்று பெரியார்களை நான் நொந்து கொள்வதுண்டு. பள்ளிப் பருவத்திலிருந்தே, அதாவது பதினாறுவது வயதிலிருந்தே இலக்கியம்,சமய தத்துவங்கள் குறித்து, சுதேசமித்திரன், தமிழ்நாடு, கலாநிலையம், லோகோபகாரி, ஆனந்தபோதினி(?) ...ந்தாத்தம், செந்தமிழ்ச் செல்வி முதலிய பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதிக்கொண்டிருந்த என்னை ' இலக்கியப் புலமையும், எழுத்தாற்றலும் உடைய உங்களுக்குப் புள்ளிக் கணக்கு போடும் குமாஸ்தா வேலை சிறிதும் தகாது' என்று கூறித் தாம் நடத்திவந்த ' லோகோபகாரி ' பத்திரிகைக்குத் துணையாசிரியனாக ஆட்கொண்டவர் பரலி-சு. நெல்லையப்பராவர். லோகோபகாரி, தேசபந்து ஆகிய வாரப் பத்திரிகைகளில் சேவை; புரிந்தபின், இடையே என் வாழ்க்கையில் எத்

பட்ட ஒரு மாறுதலில் நான் வேறு துறை எதற்கேனும் போய்விடு வேனே என்று கருதி, தமிழ்ப் பேரறிஞர் மணி—திருநாவுக்கரசு முதலியார் 'திராவிடன்' என்னும் தினசரிப் பத்திரிகையின் ஆசிரியப் பொறுப்பை யேற்ற சமயத்தில், 'ஆங்கிலத்திலும் தமிழிலும் போதிய அறிவு வாய்ந்த இளைஞர்களைப் பத்திரிகைத் தொழிலில் ஈடுபடச் செய்தால்தான் தமிழ்ப் பத்திரிகைகள் நல்ல முறையில் வெளி வரும்' என்று கூறி அவருக்குத் துணையாக இருக்குமாறு பணித்து என்னைப் பத்திரிகைத் தொழிலிலேயே நிலைத்திருக்கச் செய்தவர் தமிழ்ப் பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியார். சூழ்நிலையால் பாதிக்கப்பட்டுச் சோர்வுறும் சமயங்களில் நான் ஆறுதல் பெறச் செல்லுமிடம் சாது நிலையம். 'தம்பி, சோதனைகளைக் கண்டு அஞ்சலாமா! நீங்களெல்லாம் தான் பத்திரிகைத் தொழிலில் இருக்க வேண்டும்' என்று கூறித் தாம் தமிழாசிரியர் வேலையை விட்டுத் தேச பக்தன், நவசக்தி பத்திரிகைகளை நடத்தி வந்த காலத்தில் ஏற்பட்ட அனுபவங்களை யெல்லாம் விவரித்து, எனக்கு ஆறுதல் கூறி என் பத்திரிகைத் தொழிலுக்கு ஆசி கூறி வருபவர் தமிழர் தலைவர் திரு. வி. கலியாண சுந்தர முதலியார். இம்மூன்று பெரியார்களுக்கும் நன்றி செலுத்த வேண்டியிருக்க, அவர்களை நொந்து கொள்வானேன் என்றால், பத்திரிகை யுலகிலும் இலக்கிய உலகிலும் நான் மட்டுமல்ல, என் போன்ற சிலர் அனுபவித்து வரும் கஷ்ட நஷ்டங்கள்தாம் காரணமாகும்.

இவ்வளவு மனத்துக்கு வேதனை மிகும் நிலையிலும் நான் பத்திரிகாசிரியனாய்,எழுத்தாளனாய்இருக்கும் விஷயத்தில் உவகையும், பெருமையும் கொண்டு வருவதற்கு ஒரே ஒரு காரணம் தான் உண்டு. ஜன சமுதாயத்தை உயர்வடையச் செய்யவல்ல—நாட்டின் பண்பாட்டை ஓங்கி விளங்கச் செய்யக் கூடிய—இலக்கியத் திருப்பணியில் ஈடுபடும் அருமையான வாய்ப்பும், நற்பேறும் கிடைத்திருக்கிறதே என்ற ஆத்ம திருப்தி. அது மட்டுமல்ல; மா பெருங் காவியங்களையும், அறிவியல்நூல்களையும் சிறந்த சிறு கதை

களையும், நவீனங்களையும், அழகிய கவிதைகளையும் வாசிக்கும் காலங்களில் மனம் கொள்ளும் மகிழ்ச்சி நிறைவும், இவைகளைப் போன்று நாமும் எழுத முயல வேண்டுமென்று உண்டாகும் ஊக்கமுமாகும்.

இவ்விதம் என் உள்ளத்தை ஒருங்கே கவர்ந்த உலக இலக்கியங்களில் லியோ டால்ஸ்டாய் என்னும் ரஷ்யப் பேரறிஞர் எழுதிய "Resurrection"-என்னும் நவீனமும் ஒன்றாகும். இது போன்ற உன்னத வாழ்க்கைச் சித்திரத்தை வேறு யாரால் எழுத முடியும் என்று வியந்து கொண்டிருந்த சமயத்தில், தற்செயலாக, Hall Cain என்னும் ஆங்கில ஆசிரியர் எழுதிய 'The master of man' என்ற நாவலைப் பார்க்க நேர்ந்தது. அதைப் படித்து முடித்த போது, அக்கதையின் சிறப்பு, டால்ஸ்டாயின் மேற்குறித்த நாவலையும் ஒருவிதத்தில் விஞ்சி விட்டதாக எனக்குத் தோன்றியது.

மேற்குறித்த இரு நாவல்களைப்போல் தமிழிலும் ஒரு நவீனம் வந்தால் எவ்வளவு நன்றா யிருக்கும் என்ற எண்ண முண்டாயிற்று. இவ்வெண்ண முதிர்ச்சியின் பயனாக, என் சிந்தனை ஊற்றிலிருந்து கிளர்ந்து எழுந்த சிருஷ்டிதான் "வேலைக்காரி" என்னும் இந் நவீனம் ஆகும். ஆனால், என்னுடைய இம்முயற்சி எவ்வளவுக்கு வெற்றி பெற்றிருக்கிறது? இக்கதை அமைப்பில் மேற்குறித்த நாவல்களின் போக்கு எவ்வளவுக்கு இடம் பெற்றிருக்கிறது? என்பதை என்னால் சொல்ல முடியாது. இளமையுள்ளத்திலிருந்து எழுந்த ஆர்வத்தின் விளைவு இது என்று மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

இந்த நாவலை நான் 1938-ம் ஆண்டினிடையே கதாநாயகியின் பெயரையே கதைப் பெயராக வைத்து எழுதி 'பிரசண்ட விகடன்' என்னும் சிறந்த தமிழ் இலக்கியப் பத்திரிகையில் வெளியிடலானேன். இந்நாவலைப் புத்தக உருவிலும் காணப் பல அன்பர்கள் விரும்பியும், நான் தொடங்கி நடத்தி வந்த சக்தி பிரசுராலயம் எதிர்பாராத சில அசௌகரியங்களால் நிறுத்தப்பட்டதால்

உடனடியாக வெளியிட முடியாமல் போயிற்று. நண்பர் மே. சக்கர வர்த்தி நாயனார் இந்நாவலின் முதற் பதிப்பை வெளியிடுவதன் வாயிலாக இக்குறையைப் போக்கிவிட்டார். அவருக்கு என் நன்றி உரித்தாகுக.

' ஜீவோதயம் '
சௌராஷ்டிர நகர்,
அக்பராபாத் போஸ்டு,
சென்னை
7-12-46.

அன்பன்

நாரண - துரைக்கண்ணன்

# வேலைக்காரி

## முதல் அதிகாரம்.

"அம்மா! அம்மா!! இன்னைக்கி என்னம்மா, இவ்வள சீக்கிரம்?..........." என்று கேட்டுக்கொண்டே படுக்கையை விட்டு எழுந்தாள் தனபாக்கியம். அவளுடைய தாய் உண்டாக்கிய சந்தடி இவளை உறக்கத்தினின்றும் எழுப்பிவிட்டது. எனவே, அவள் கண்களைத் துடைத்துக்கொண்டு, தான் படுத்திருந்த கிழிந்த ஓலைப்பாயைச் சுருட்டியெடுத்து ஒரு மூலையில் கிடத்தினாள்.

"கண்ணு தனம்! நீ ஏம்மா இதுக்குள்ளே எழுந்துகிட்டே!..............நான்தான் என் தலையெழுத்து விடிஞ்சதும் விடியாததுமா எழுந்து வேலைக்கி ஓடவேண்டியிருக்கு; இன்னைக்கி பட்டினத்திலிருந்து அம்பலம் வராளும். அதுக்காவ எஜமானியம்மா ஏகப்பட்ட தடபுடல் பண்றாங்க. என்னை இராத்திரி அங்கேயே தங்கிடச் சொன்னாங்க. வூட்டிலே ஒரு வயசு பொண்ணை வுட்டுட்டு, பிறத்தியார் வூட்டிலே தங்க முடியுமா? அதுக்காவ நான் மூணாஞ் சாமதுக்கே வந்திடறேன்னு சொல்லீட்டு ஓடியாந்தேன்..............." என்று பெருந்தேவி தன் மகளுக்கு, அன்று தான் சீக்கிரம் போக வேண்டிய காரணத்தைக் கூறிக்கொண்டு வந்தாள்.

தனபாக்கியம் இடைமறித்து "ஆமாம்மா! பட்டினத்திலிருந்து அம்பலமுன்னு யாரோ வாரான்னு சொன்னையே! அது யாரு?" என்று ஆர்வத்தோடு கேட்டாள்.

"அவன்தான் பண்ணை வூட்டுச் சின்ன எஜமான். அவனை உனக்குத் தெரியாதா?.......ஆமாம்; அவனை உனக்குக் கவனமிருக்காது. உங்கப்பன் உசுரோடு இருக்கும்போதே அவன் பட்டினத்துலே படிக்க ஊரைவிட்டுப் போயிட்டான். பட்டினத்திலே படிக்கும்போதாயினும் வருஷத்துக்கு ஒரு முறை இரண்டு முறை வருவான்; அக்கரை சீமைக்குப் போன பிற்பாடு நாலைந்து வருஷமா வரதே கிடையாது. அத்தோடே இப்போதான் வரான்.......ஹும். உங்கப்பா நம்மை வுட்டுட்டுப் போயும் ஆறேழு வருஷமாயிடுத்தே......." என்று கூறிப் பெருமூச்செறிந்தாள் பெருந்தேவி. காலஞ் சென்ற கணவனின் நினைவு வந்ததும், அவள் கண்களில் நீர் துளித்தது.

தனபாக்கியம் தன் தாயின் முகமாறுதலையும் நிலையையுங் கவனிக்கவில்லை. அம்பலவாணனைப் பற்றிக் கேள்விப்பட்டதும், அவளது இளம் உள்ளத்தில் ஒரு வகையான குதூகல உணர்ச்சி பிறந்து அவளைத் தன்வயப்படுத்தியது. எனவே அவள் தன் தாயை நோக்கி, "அம்மா! இன்னைக்கி நான்கூட வரேம்மா பண்ணை வூட்டுக்கு. சின்ன எஜமானைப் பார்க்கணும்னு எனக்கு ஆசையாயிருக்கு, அம்மா!" என்று தன் மனதிலெழுந்த ஆவலை வெளியிட்டாள்.

பெருந்தேவி முதலில் தயங்கினளாயினும், பின்னர் தன் மகள் மீதுள்ள அளவுகடந்த வாஞ்சையால், அன்று அவளைத் தன்னுடன் அழைத்துச் செல்ல இணங்கினள்.

பெருந்தேவி ஏழையாயினும் உத்தம குணம் வாய்ந்தவள். மானத்தில் மிகுந்த கருத்துள்ளவள். அதுவே அவளை அவளது கணவன் இறந்து மிகவும் கஷ்டப்படவேண்டிய நிலை வந்த காலத்தும், தவருன நெறியில் செல்லவொட்டாது தடுத்தது. அவளது வாழ்க்கையில் இதுவரை ஏற்பட்ட சோதனைகளிலெல்லாம் வெகுவாகச் சமாளித்து வெற்றி பெற்று வந்தாள். அவளது இருபத்தைந்தாவது வயதிலே மாரியப்பன் அவளை நிராதரவாக விட்டுக் காலகதி யடைந்தான். மாரியப்பனுக்கு மனமொத்த மனைவி பெருந்தேவி. அவன் தஞ்சாவூர் ஜில்லாவிலேயே பிரபல மிராசுதாரான ஆலாலசுந்தர முதலியாரிடம் பண்ணையாளாக இருந்து வேலை செய்து வந்தான். ஆயிரம் வேலிக்கு மேல் நில புல முடையவராதலால், ஆலாலசுந்தர முதலியார், "பண்ணையார்" "பண்ணையார்" என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டு வந்தார். "பண்ணை யார்", "பண்ணையார் வீடு" என்ருல், தஞ்சாவூர் ஜில்லாவில் ஆலாலசுந்தர முதலியாரையும், அவரது மாளிகையையுமே குறிக்கும். அத்தகைய பண்ணையார் இடத்தில் வேலைசெய்து வந்ததால் மாரியப்பனுக்கும் கௌரவமிருந்து வந்தது. அக்கௌரவத்தையும் மதிப்பையும் அவன் தன்னுடைய நன்னடக்கையாலும் நற்

குணங்களாலும் காத்து வந்தான். ஆயினும், துரதிர்ஷ்ட வசத்தினல், பண்ணையார் காலகதியடைந்த இரண்டொரு வருஷங்களுக்கெல்லாம் இவனும் அகால மரண மடைந்தான். ஆகவேதான் இதுவரை வீட்டைவிட்டு வெளிவராது கௌரவமாக வாழ்க்கை நடத்திவந்த பெருந்தேவி, வெளிவந்து கஷ்ட ஜீவனஞ் செய்யவேண்டியதாயிற்று. அவள் பண்ணையார் மாளிகையிலேயே பண்ணை எஜமானி சுந்தரத் தண்ணியின் தயவினல் பணிப்பெண்ணுக இருந்து காலங் கழிக்கலானுள். கணவனுக்குப் பிறகு அவனது ஞாபகார்த்தமாக விளங்கும் தனபாக்கியத்தைப் பெருந்தேவி, தன் அன்பின் நிலைக்களனுகக் கொண்டாள். பெருந்தேவி தன்னுயிரினும் மேலாக மதித்து வந்தாளென்ருல் அது மிகையாகாது. எனவே, தனது இவ்வளவு ஏழ்மை நிலையினும் பெருந்தேவி, தன் மகளை அவ்வூரிலுள்ள கிறிஸ்தவப் பெண் பள்ளிக்கூடமொன்றில் படிக்கவைத்து வந்தாள். ஒழிந்த நேரங்களில் அவள் தன் மகளைத் தன்னுடனேயே பண்ணையார் வீட்டுக்கு அழைத்துச் செல்வாள். ஆனல் தனபாக்கியம் மங்கைப் பருவ அழகை அடையும் நிலைக்கு வந்ததும், பெருந்தேவி அவளைப் பள்ளிக்கூடத்தினின்றும் நிறுத்திவிட்டதோடு, பண்ணையார் வீட்டுக்கு அழைத்துச் செல்வதையும் விட்டுவிட்டாள். தான் வேலையின் பொருட்டுப் பண்ணையார் வீட்டுக்குப் போகும்போது பக்கத்து வீட்டிலுள்ள குப்பாயி என்னும் கிழவி யொருத்தியைத் துணையாக இருக்கும்படிச் செய்துவிட்டுச் செல்

வாள். தன் மகளை நல்ல விதமாகவும் அருமையாக வும் வளர்ப்பதில் பெருந்தேவி அவ்வளவு சிரத்தை காட்டினாள்.

## இரண்டாம் அதிகாரம்.

பண்ணையார் மாளிகை அமளிபடுகிறது. அவ் வூரிலுள்ள பிரமுகர்களும், பெண்மணிகளுமெல் லோரும் அங்குக் குழுமியிருந்தனர். பண்ணையில் வேலைசெய்யும் படையாச்சிகளும் அங்குப் பணி வுடன் திரண்டிருந்தனர். பண்ணை எஜமானியும் அவளது மூத்த விதவை மகளான சிவகாமியும், மற்றும் உறவினரும் ஆவலே வடிவாய்க் காணப் பட்டனர். சிறிது நேரத்திற்கெல்லாம் "கிணும்; கிணும்" என்ற சதங்கை சப்தமொலிக்க அழகிய காளைகள் பூட்டப்பட்ட வண்டியொன்று வந்து வாசலில் நின்றது. மாளிகையினுள்ளிருந்த அனை வரும் பரப்பரப்போடு வெளியே நோக்கினர். மேல் நாட்டு நவநாகரிக மிடுக்குடன் கூடிய வாலிபனொரு வன் வண்டியிலிருந்து கீழே குதித்தான். சுந்தரத் தண்ணியும், சிவகாமியும் ஓடோடியும் போய் அவனை ஆர்வத்தோடு வரவேற்றனர். அவ்வாலி பன் யாரென்று வாசகர்கள் இந்நேரம் அறிந்திருப் பார்கள். அம்பலவாணன் தாயின் அன்புப் பிணைப் பில் கட்டுண்டு நின்றான். சிவகாமி சகோதர வாஞ்சை மீதூர ஆனந்தக் கண்ணீர் ததும்பிய கண்களால் அவனை வரவேற்றாள். அவர்கள் சந்திப்பு நிலை, அங்குள்ளவர்களின் உள்ளங்களை உருக்கியது.

தாய் தமக்கை ஆகியவர்களின் அன்பு வெள்ளத்தில் மிதந்தவாறு மாளிகையினுள் நுழைந்த அம்பலவாணன், தன் வரவுக்காக அங்கு வந்து கூடியுள்ள கனவான்களுக்கும், பெண்மணிகளுக்கும் வந்தனஞ் செலுத்தலானான். ஊர்ப் பிரமுகர்கள் அவனது க்ஷேம லாபங்களை விசாரித்தனர்; அவனுடைய சீமைப் படிப்பைப் பற்றியும், அங்கு அவனுக்கு உண்டான அனுபவங்களைப் பற்றியும், பல கேள்விகள் கேட்கலாயினர். அவற்றிற்கெல்லாம் அவன் தக்கபடி பதிலளித்ததோடு தான் எம். எஸ். ஸி. பரீக்ஷையில் முதல்தரமாகத் தேர்ச்சிபெற்று வந்திருப்பதையுந் தெரிவித்தான்.

இவ்வளவு பெரிய கூட்டத்தினிடையே, ஒரு இளம் பெண், மகளிர் குழுவின் இடைவெளியில் அம்பலவாணனை எட்டி எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவள்தான் தனபாக்கியம் என்றால் வாசகர்கள் ஆச்சரியப்படமாட்டார்கள். தனபாக்கியம் தன் தாயைப்போலவே, பெண்ணரசைப் பாதுகாக்கும் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய படைகளை யுடையவளா யிருப்பினும், பண்ணைச் சின்ன எஜமானைப் பார்க்கவேண்டுமென்ற ஒரே ஆவலில் தன் பெண்ணியற்கையையும் அந்நிலையில் மீறிவிட்டா ளென்றே கூறவேண்டும். அம்பலவாணனைக் கண்டதுமே, அவனுடைய அழகிய வதனத்திலும் கம்பீரத் தோற்றத்திலும் அவளது இளம் உள்ளம் பறிபோய்விட்டது.

அம்பலவாணன் தன்னை அன்புடன் உசாவும் கனவான்கள் அனைவர்க்கும் முறையே வந்தனஞ்

செலுத்தி வருகையில், அவன் கண்பார்வை தற்செயலாகப் பெண்கள் கூட்டத்தினிடையே யிருந்து எட்டிப் பார்த்துக்கொண்டிருக்கும் தனபாக்கியத்தின் மீது பதிந்துவிட்டன. அவள்மீது வைத்த விழிகளை வெகுநேரம் வரை எடுக்காமலே அசைவற்றிருந்தான். இமையா நாட்டங்கொண்ட தேவனோ என்றுகூட அவனது அப்போதைய நிலை கருதும்படியாக இருந்தது. தனபாக்கியம் அப்படி யொன்றும் அழகி யில்லை. சாதாரண குடியானப் பெண்களைப் போன்று கருநிறமுடையவளாகவும், எளிய தோற்றமுடையவளாகவுமே இருந்தாள். ஆயினும், அவளது செழுமையான உடல் அமைப்பும், உருண்டு திரண்ட உறுப்புக்களும், பரந்த முகமும், பார்ப்பவர் உள்ளங்களைக் கவர்ச்சி செய்யக் கூடியவைகளாக இருந்தன. முக்கியமாக அவளது இளமை யழகும், களங்கமற்ற பார்வையுமே நமது அம்பலவாணன் மனத்தைக் கொள்ளை கொண்டன எனக் கூறவேண்டும். அம்பலவாணன் தன்னையே கூர்ந்து நோக்கிக்கொண்டிருப்பதைக் கண்ட தனபாக்கியம், நாணத்தால் தலை குனிந்தாள்; முகங்கவிழ்ந்து தாயின் பின்னே மறைந்தாள்; நட்சத்திரக் கூட்டத்தினிடையே பிரகாசித்துக்கொண்டிருந்த சந்திரன் மேகங்களினூடே மறைவதுபோல், மகளிரிடையே இருந்த தனபாக்கியம், கூட்டத்தோடு கூட்டமாக மறைந்துவிட்டாள். அதன் பிறகே அம்பலவாணன் தன் நிலையை யுணர்ந்து திடுக்கிட்டுப் பிறர் அறியாவாறு தன்னைச் சமாளித்துக்கொண்டான்.

கூட்டத்திலிருந்தோர், அம்பலவாணன் தன பாக்கியம் ஆகியவரிடையே நிகழ்ந்த மாறுதல்களைக் கவனிக்கவேயில்லை. அவர்கள் ஒவ்வொருவராக அம்பலவாணனை ஆசீர்வதித்து அவனிடமும் சுந்தரத் தண்ணியிடமும் விடைபெற்றுச் சென்றனர்.

சுதந்தரத் தண்ணியும், சிவகாமியும் அம்பலவாணனைத் தெய்வமாகக் கொண்டாடினர். கேம்பிரிட்ஜ் கலாசாலையில் உயர்தரக் கல்வியில் தேர்ச்சி பெற்றுச் சுகமே வந்து சேர்ந்ததற்காகக் கடவுளை வாழ்த்தினர். ஊரார் வந்து பார்த்துச் சென்றதால், கண்ணேறுபட்டிருக்குமென்று கருதி அவர்கள் அம்பலவாணனுக்குத் திருஷ்டி கழித்தனர். சிற்றுண்டி பரிமாறிச் செல்வமாக உண்பித்தனர். அன்புப் பெருக்கால் இவர்கள் செய்யும் உபசாரமெல்லாம் அம்பலவாணனுக்குச் சங்கடமாகத்தான் பட்டது. இருப்பினும், அதை வெளிக்குக் காட்டாது அவர்களுக் கிணங்க நடந்துகொண்டான்.

அம்பலவாணன் தன் பிறப்பிடமாகிய தஞ்சையில் இருந்தவரை, சாதாரணமாகவே இருந்துவந்தான். மேல் படிப்புக்காகச் சென்னைப்பட்டினத்துக்குப் போனபிறகு அவனது போக்கில் பெருமாறுதல் ஏற்பட்டது. ஒரு சில மைனர் வாலிபர்களைப்போல் குடி, கூத்தி முதலிய விஷயங்களில் அதிகமாக ஈடுபடாவிடினும், உலகானுபவத்தை ஒருவாறு பெற்றிருந்தான். தன்னையொத்த கலாசாலை மாணவிகளோடு சகஜமாகப்

பேசிப் பழகிவந்தான். சீமைக்குச் சென்ற பிறகு, பெண்களுடைய சிநேகம் அதிகமாய்விட்டது. பல வித தன்மை வாய்ந்த நவநாகரிக நாரீமணிகளோடு கோலாகலமாகக் காலங் கழித்து வந்திருக்கிறான். ஆயினும், தனபாக்கியத்தைக் கண்டதும் அவனுக்கு ஏற்பட்ட உணர்ச்சி, ஒரு புது அநுபவமாக இருந்தது.

தான் கண்ட பெண்மணி யார்? தன் கருத்தைக் கவர்ந்த காரிகை எங்கிருப்பவள்? என்று அறிய அம்பலவாணன் மனம் ஆவல் கொண்டது. தன்னைக் காணவந்த கிராம மக்களில் யாருடைய புதல்வியாக வாயினும் இருக்கவேண்டும்; அவளது எளிய நிலைமையைக் கவனிக்கும்போது, அவள் சாதாரண குடியானப் பெண்ணாய்த் தானிருக்க வேண்டும் என்றெல்லாம் அம்பலவாணன் தனபாக்கியத்தைப்பற்றி ஊகிக்கலானான். இச்சமயத்தில் தனக்குச் சமீபத்தில் ஏற்பட்ட சந்தடியைக் கேட்டுத் தலை நிமிர்ந்து நோக்கினான். தன்னை நோக்கித் தன் தாய் வந்துகொண் டிருப்பதையும் அவளைத் தொடர்ந்து இரு பெண்கள் ஏதோ கேட்டுக்கொண்டு வருவதையுங் கண்டான். அவ்விருவரில் தன் கருத்தைக் கவர்ந்த பெண்மணியும் இருப்பதைக் கண்டு ஆச்சரியமும் மகிழ்ச்சியுங் கொண்டான்.

"அம்மா! நான் வூட்டுக்குப் போயிட்டு வரேம்மா! குழந்தையை வுட்டுட்டுச் சாயங்காலம் சீக்கிரம் வந்துடரேம்மா!..........''

"என்னடி! உனக்கு அவசரம் முழுகிப் போயிடுத்து. எல்லாம் போட்டது போட்டபடியும் வைத்தது வைத்தபடியும் இருக்கிறது. ஒரு வேலையும் முடியாமல் இருக்கிறது. நீ வீட்டுக்குப் போகிறேனென்கிறாயே! ஏன்? தனமும் இங்கேதான் இருக்கட்டுமே! அங்கே போய்த்தான் அவள் என்ன செய்யப்போகிறாள்?—"

"இல்லேம்மா!..........."

"என்ன இல்லேம்மா! தம்பி பட்டினத்திலே இருந்து வந்திருக்கிறான். அவன் கூப்பிட்ட குரலுக்கு ஏனென்று கேட்க, அவனுக்கு வேண்டிய குற்றேவல் செய்ய ஆளும் வேண்டியிருக்கிறது. இனிமேல் உன்னோடு தனபாக்கியமும் இங்கே இருந்து வேலை செய்யட்டும்.—நான் உனக்கு எத்தனைத் தடவைசொல்லி யிருக்கிறேன்; நீயும் உன் மகளும் எங்களோடு இங்கேயே இருந்துவிடுங்களென்று. அதை நீ காதிலே போட்டுக்கொள்கிறாயா?—உனக்கு அங்கே என்னடி வைத்திருக்கிறது? ஒரு வயது வந்த பெண்ணைத் தனியே விட்டுவிட்டு இங்கே வேலைக்கு வருகிறதும் போகிறதும் நன்றாயிருக்கிறதா? ஏதோ உன் புருஷன் எங்களிடம் இருந்த நன்மையையும், நீயும் நல்ல விதமாக நடந்துகொள்வதையும் உத்தேசித்து நான் பரிவோடு கூறினால், நீ அதைச் சட்டை பண்ணமாட்டேனென்கிறாயே!—நாம் என்ன தான் நல்லது செய்தாலும், இந்த வேலைக்கார நாய்களுக்கு மட்டும் நன்றி யென்பது சிறிதும் இருப்

படுதேயில்லை................" என்று சுந்தரத்தண்ணி நீட்டி முழக்கினாள்.

பெருந்தேவி ஒன்றும் பேசமாட்டாது கண் கலங்கி நின்றாள். தான் அருமையாக வளர்த்து வரும் மகள் தன்னைப்போல் வேலைக்காரியாக இருக்கக் கூடாது என்பது அவள் எண்ணம். அத்துடன் தன் உயிருக்குயிரான கணவன் வாழ்ந்த குடிசையை விட்டு வர அவளுக்குச் சிறிதும் மனமில்லை. அதனால்தான் அவள் தன் எஜமானி இதற்கு முன் பலமுறை இது பற்றிச் சொல்லிவந்தும், கவனிக்காதவள் போலிருந்து வந்தாள். எஜமானி எடுத்துக் காட்டியதுபோல் தக்க பருவம் வாய்ந்த தன் அருமை மகளைத் தனியே குடிசையில் விட்டு வருவதும் கஷ்டமாய்த் தானிருந்தது. ஆகவே, இச்சமயம் இவ்விஷயம் சுருக்கென்று மனதில் தைக்கவே, இதுபற்றி அவள் வெகுவாக யோசித்தாள். கடைசியாக அவள் ஏதோ ஒருவித முடிவுக்கு வந்தவளாய் எஜமானியை நோக்கி, "அம்மா! நீங்கள் சொல்றபடியே நடக்கக் காத்திருக்கேன்....'; என்று கூறினாள்.

"சரி; அப்படியானல் போய் வேலையைப் பார்! நாளைக்கு உன் சாமான்களையெல்லாம் எடுத்துக் கொண்டு வரலாம்.—தனம்! நீ போய் சிவகாமிக்கு உதவியாயிரு" என்று கட்டளையிட்டாள்.

சுந்தரத் தண்ணிக்கும் பெருந்தேவிக்கும் இடையே நடந்த சம்பாஷணை, அம்பலவாணன் காதுகளில் அரை குறையாகவே விழுந்தது.

ஏனென்றால் அவன் கண்ணுங் கருத்துமெல்லாம் தனபாக்கியத்தின் உருவத்திலேயே பதிந்து கிடந்தது. கரு வண்டுகள் மலர்களிலுள்ள தேனை உறிஞ்சுவதுபோல், அவனது கருவிழிகள் தன பாக்கியத்தின் இளமை எழிலைப் பருகிக்கொண்டு லயித்திருந்தன. சுந்தரத் தண்ணியின் கட்டளைப் படி தனம் அவ்விடத்தை விட்டு அகன்றதும், அவனது மனமும் அவள் பின்னேயே சென்றது. எனவே, அவன் மனதை அவள் அழகில் பறி கொடுத்து விட்டுப் பெருமூச் செறிந்தவாறு சோபாவில் சாய்ந்தான்.

## மூன்றும் அதிகாரம்

ஒருநாள் மாலை பண்ணையார் மாளிகையின் பின்புறத் தோட்டத்தில் அம்பலவாணன் ஆழ்ந்த சிந்தனையோடு மெல்ல உலாவிக்கொண்டிருந்தான். திடீரென யாரோ ஒருவர் தன்மீது மோதியதை யுணர்ந்து அசைவற்று அப்படியே நின்றுவிட்டான். அவனை அவ்விதம் திகைத்து நிற்கச் செய்தது ஒரு பெண்ணுருவமே. அது யார்? நமது தன பாக்கியமே யாவள். அவள் ஏதோ வேலையாகத் தோட்டத்துக்கு விரைவாக வந்துகொண்டிருந்த வள், ஒரு பெரிய மாமரத்தின் பக்கமாக விருந்து வந்துகொண்டிருந்த அம்பலவாணனைக் கவனி யாது மோதிவிட்டாள். அம்பலவாணனும் யோச னையில் ஆழ்ந்தவாறு வந்துகொண் டிருந்ததால் எதிரே வருபவளைக் கவனிக்கவில்லை. இருவரும் எதிரெதிர் மோதிக்கொண்டதால் ஏற்பட்ட ஸ்பரிச

உணர்ச்சி மின்பொறிபோலத் தாக்கி இருவரையும் நிலை குலையச் செய்தது. சிறிதும் எதிர்பாராத வாறு நேர்ந்த இச் சம்பவத்தைக் கண்டு தனபாக்கியம் விதிர்ப்புற்றாள். அவளது உடல் முழுதும் வியர்வை யரும்பி வழிந்தது. சின்ன எஜமான் தன்னை என்னவிதமாகக் கோபித்துக்கொள்வாரோ என்கிற அச்ச மொருபுறமும், அவர் முன் நிற்க நேர்ந்ததே என்கிற நாண மொரு புறமும் சேர்ந்து அவளைத் தலை குனியச்செய்தது. இந் நிலையிலேயே சிறிது நேரம் இருவரும் இருந்தனர்.

தனபாக்கியத்துக்கு அச்சத்தைவிட நாணம் பிய்த்துத் தின்றதால், அவள் நெருப்பின் மீது நிற்பவள்போல் துடி துடித்தாள். எனவே, அவள் அவ்விடத்தை விட்டுச் செல்வதற்கு அடியெடுத்து வைத்தாள். இதுவரை உள்ளக் கிளர்ச்சியால் உன்மத்தன்போல் தனபாக்கியத்தையே நோக்கியவாறு நின்றுகொண்டிருந்த அம்பலவாணன், அவள் போக முயல்வதை யறிந்ததும் மனம் பதறி அவளது கையைப் பிடித்து நிறுத்தினான். அவளைக் கண்டது முதல், அவளுடன் எவ்விதம் பேசுவது? எவ்வாறு பழகுவது? என்ற தீவிர யோசனையில் அல்லும் பகலும் மனதோடு போராடிக் கொண்டிருந்த அல்பலவாணன், தற்செயலாக அவளை நேருக்கு நேர் சந்திக்க நேர்ந்த இச்சந்தர்ப்பத்தை நழுவ விடாது, பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று தீர்மானித்துவிட்டான். ஆதலால் அவளைத் தடுத்து நிறுத்திவிட்டான். அவன் இவ் விதங் கையைப் பிடித்து நிறுத்தியதும் தனபாக்கி

யம் மிகவும் பயந்துவிட்டாள். அவளது மெல்லிய உடல் பெரும் பீதியால் வெட வெடவென நடுங்கியது.

"தனம்! ஏன் இப்படிப் பயப்படுகிறாய்?........" என்று புன் சிரிப்போடு கேட்டான் அம்பலவாணன்.

அவள் மௌனமாயிருக்கவே அம்பலவாணன், அவளது முகவாய்க்கட்டையைப் பிடித்து முகத்தை நிமிர்த்தி, "இதோ என்னை நிமிர்ந்து பார். நான் என்ன உன் கண்களுக்குப் பூதம் பிசாசு போலவா காணப்படுகிறேன்? என்னைக் கண்டு ஏன் உனக்கு இவ்வளவு அச்சம்?" என்று நயமாக வினவினான்.

அம்பலவாணனது வார்த்தை தனபாக்கியத்துக்குச் சிறிது தைரியத்தைத் தந்ததாயினும், வெட்கம் அவளைத் தலைதூக்க வொட்டாமல் செய்தது. எப்படியாயினும் அவ்விடத்தை விட்டுப் போய்விட வேண்டுமென்று அவள் துடி துடித்தாள். ஆகவே அவள் அம்பலவாணன் பிடித்திருக்கும் பிடியினின்றும் தன் கைகளை விடுவித்துக் கொண்டு போக முயன்றாள்.

இதை யறிந்த அம்பலவாணன் தனபாக்கியத்தின் முகத்தைக் கூர்ந்து நோக்கி, "தனம்! என்னோடு பேசமாட்டாயா! என்னைக் கண்டால் உனக்குப் பிடிக்கவில்லையா?..........." என்று கேட்டான். அவனது கரங்கள் அவளுடைய மிருதுவான கைகளை வருடியும் பிசைந்தும் விஷமஞ் செய்து கொண்டிருந்தன.

தனபாக்கியம், ஸ்பரிச உணர்ச்சியால் தன்னை மறந்து அசைவற்று நின்றாள். அம்பலவாணன் மீண்டும் பேசத் தொடங்கினான்: "தனம்! உன்னைக் கண்டது முதல் எனக்கு உன்மீது எப்படியோ அன்பு ஏற்பட்டுவிட்டது. உன்னோடு பேசவேண்டுமென்று எனக்கு எவ்வளவு ஆசை தெரியுமா! ஆனால் நீயோ பேசா மடந்தைபோல் இருக்கிறாய். எனக்கு உற்ற வேலையைச் செய்யும் போதுகூட இயந்திரப் பதுமைபோல இயங்குகிறாயே யொழிய, ஒரு வார்த்தை-ஹூம்; ஹூம். உன் பவள வாயைத் திறந்தால் முத்துக்கள் உதிர்ந்துவிடுமென்ற பயமா? அப்படிச் சிந்திவிட்டால் நான் பொறுக்கியெடுத்துத் தருகிறேன். இப்போதாயினும் ஒரு வார்த்தை பேசு" என்று நயமாகக் கேட்டான்.

சின்ன எஜமான் இவ்வளவு தூரங் கேட்கும் போது, தான் பேசாமலிருப்பது சரியானதல்ல என்று கருதிய தனபாக்கியம், ஏதோ வாய்திறந்து கூற முயன்றாள். ஆனால் அவளது நாவெழவில்லை. அவளை அப்படியே எடுத்து விழுங்கி விடுபவன் போல் கண்களால் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்த அம்பலவாணன், அவளது வாயசைந்தும் வார்த்தை வெளிவராததைக் கண்டு, அவள் பேச மாட்டாது தத்தளிக்கிறாள் என்று அறிந்துகொண்டான். அவள் மௌனஞ் சாதிக்கச் சாதிக்க அவனுக்கு ஆர்வ மிகுந்தது. எனவே, அவன் தனபாக்கியத்தின் சரியாகப் பின்னிவிடப் படாது காற்றில் பறந்து முகத்திலும் தோளிலும் விழுந்து

கொண்டிருக்கும் கூந்தலைத் தன் கைகளால் நீவியும், கோதியும் சீர் திருத்திய வண்ணம், "தனம்! கூந்தலை வாரிப் பின்னிவிடக் கூடவா உனக்கு அவகாசமில்லை? நீ அணிந்திருக்கும் ஆடைகளெல்லாம் பல இடங்களில் கிழிந்திருக்கின்றனவே! வேறு நல்ல உடைகளை உடுத்தக்கூடாதா?........" என்று அடுக்கிக்கொண்டே போனான். அவன் குரலில் கனிவு தொனித்தது.

தனபாக்கியத்துக்கு அம்பலவாணனது பரிவுப் பேச்சுக்கள் அவளது ஏழ்மை நிலையைச் சுட்டிக் காட்டுவதுபோலிருந்தது. ஆதலால் வெட்கமும் வருத்தமும் ஒருங்கே யடைந்தவளாய் மெல்ல வாய் திறந்து, "எஜமான், என்போன்ற ஏழை வேலைக்காரப் பெண்ணுக்குத் தலைவாரிக்கொள்ள நேரமேது? நல்ல துணிமணிகள் எங்களுக்கு எங்கிருந்து கிடைக்கும்? அரைஜாண் வயிற்றைக் கழுவுவதற்கே நாங்கள் அரும்பாடு படவேண்டி யிருக்கிறதே!..........." என்று கூறினாள்.

"அப்படியா! உன்னை அழகுப்படுத்திக்கொள்ளக் கூடவா அவகாசங் கிடைக்கவில்லை? உடுத்திக்கொள்ள நல்ல ஆடைகள் கூடவா உனக்கு இல்லை? பாவம். உன் நிலையைக் கேட்க என் மனம் வருந்துகிறது. இரு, அம்மாவிடஞ் சொல்லி நாளைக்கே உனக்கு விதவிதமான ஆடைகள் வாங்கித்தரச் சொல்லுகிறேன்................" என்று மிகவும் அநுதாபத்தோடு அம்பலவாணன் கூறலானான்.

"ஐயையோ! வேண்டாம்; வேண்டாம். எஜமானியம்மாளிடஞ் சொல்லவேண்டாம். என்னைக் கோபித்துக்கொள்வார்கள். வேலைக்காரிகளெல்லாரும் இப்படித்தான் இருக்கவேண்டும்........நான் உங்களிடம் பேசினேனென்று தெரிந்தால்கூட என்மீது சீறி விழுவார்கள். உங்கள் போன்ற எஜமானரிடம் என்னை யொத்த வேலைக்காரி சகஜமாகப் பேசுவதே மரியாதைக் குறைவு..........."

".......அப்படி யார் சொன்னது?"

"என்று எஜமானியம்மாள் போன்றவர்கள் கருதுகிறார்கள். நீங்கள் என்னிடம் சரிசமமாக இருந்து இவ்விதம் பேசினீர்கள் என்று தெரிந்தால்கூட, உங்களைக் கடிந்து கொள்வார்கள்."

"நான்ஸென்ஸ்; பதினெட்டாம் பசலி புருட்கள். மனிதனுக்கு மனிதன் என்ன வித்தியாசம்? நீயும் மனித ஜென்மந்தான். நானும் மனித வர்க்கத்தைச் சேர்ந்தவன்தான்; எனக்குக் கண்ணுங் காதும் மூக்கும் வாயும் இருப்பதுபோலத்தான் உனக்கும் இருக்கின்றன. என் உடம்பில் சிவப்பு இரத்தம் ஓடுவதுபோல்தான் உன் உடம்பிலும் ஓடுகிறது. அப்படியிருக்க, நமக்குள் வேற்றுமை என்ன இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை..................." என்று ஒரு சிறிய பிரசங்கஞ் செய்யத் தொடங்கினன் அம்பலவாணன்.

தனபாக்கியத்துக்கு அவன் பேச்சு புதுமையாயிருந்தது. அவன் பேசுவதன் தத்துவத்தை அவள் பூரணமாக உணர்ந்தாளோ இல்லையோ

ஆனால் அவன் வார்த்தைகள் அவள் கேட்பதற்கு இன்மையா யிருந்தன. அவளை யறியாமலே அவள் முகத்தில் புன்னகை அரும்பியது. "அதென்னமோ எஜமான்; உங்களுக்கே தெரியப்போகிறது?....உம்....எஜமான். நான் வந்து நாழிகையாய்விட்டது. நான் எதற்கோ தோட்டத்துக்கு வந்தேன். இதற்குள் மறந்துவிட்டேன். எஜமானியம்மாள் என்னைக் கூப்பிடுவார்கள். அவர்கள் கூப்பிட்ட குரலுக்கு ஏனென்று கேட்க நான் இல்லாவிட்டால், ரொம்ப கோபித்துக்கொள்வார்கள். என்னை விடுங்கள்; நான் போகவேண்டும்........." என்று கூறி, தனபாக்கியம் அம்பலவாணனை விட்டுப் போக முயன்றாள்.

தனபாக்கியம் பேசும் இனிமையையும், அவள் பேசுகையில் அவளது செவ்விதழ் அசையும் அழகையுங் கவனித்துக்கொண்டிருந்த அம்பலவாணன், அவள் தன்னைவிட்டுப் போகப்போகிறாள் என்று அறிந்ததும் பதறியவனாய், "இரு; தனம். ஏன் இவ்வளவு அவசரப்படுகிறாய்? இப்படி வா" என்று கூறியவாறு தன் இருகைகளாலும் அவளைச் சேர்த்துப் பிடித்தான். அந்த ஒரு கணத்தில் தனத்தின் தேக முழுதும் மின்சார சக்தி பாய்ந்து பரவுவது போன்ற ஒருவித உணர்ச்சி ஏற்பட்டது. அவள் தன் வசமிழந்தாள். எனவே, அம்பலவாணனது பிடியினின்றும் விடுபட விரும்பியும் அவளால் இயலவில்லை. அம்பலவாணனும் உணர்ச்சியை மீறி விட்டபடியால், தான் என்ன செய்கிறோமென்றே உணராதவனாய், ரோஜா மல

ரின் அழகைக் கண்டு காமுற்று அதைப்பறித்த ஒருவன், தன் ஆசை தீர முகர்ந்து இன்புறுவது போல், தனபாக்கியத்தைக் குழந்தைபோல் தூக்கிக்கொண்டு செடி கொடி மரங்கள் அடர்ந்த ஒரு மல்லிகைப் பந்தரண்டை சென்று ஆர்வமுறத் தழுவி முத்தங்கள் பல தந்தான். தனபாக்கியமும் இளம் பெண்தானே! அதிலும் உலகம் இன்னதென அறியாதவள். அம்பலவாணனின் வாலிப விளையாட்டுக்குக் கட்டுப்பட்டுத் தேன் குடித்த நரிபோலானுள். தென்றற் றேரின்மீது ஏறிவந்த மாரனும் அவ்விளைஞர்கள் மீது தன் கரும்பு வில்லை வளைத்து மலரம்புகளை எய்தான். குயில், கிளிகள் தங்கள் இனிய குரல்களால் மோகன கானஞ்செய்தன. பூங்கொடிகள் அவ் வாலிபர்கள் மீது மலர்மாரி பொழிந்தன.

## நான்காம் அதிகாரம்

"சிவகாமி! சிவகாமி!! எங்கே யிருக்கிறாய்? இங்கே ஓடிவா! ஒரு சந்தோஷ சமாசாரம்......." என்று கூவி யழைத்தவாறே தபால்காரன் கொடுத்த ஒரு கடிதத்தைப் பிரித்துப் பார்த்த வண்ணம் உள்ளே நுழைந்தாள் சுந்தரத் தண்ணியம்மாள். அடுக்களையுள் ஏதோ வேலை யாயிருந்த சிவகாமி, தாயின் குரலைக்கேட்டு ஓடோடியும் வந்தாள்.

"என்னம்மா அது! என்ன விசேஷம்?"

"உங்கள் சிற்றப்பா கடிதம் எழுதி யிருக்கிறார்; நம்ம அம்பலவாணனுக்கு எங்கோ பெண் பார்த்

திருக்கிறராம்; பெண் மூக்கும் முழியுமாக நன்றா யிருக்கிறளாம்; நம்ம அந்தஸ்துக்கேற்ற பெரிய இடத்துப் பெண்தானும். இதோ கடிதத்தைப்பா ரேன்........'' என்று கூறியவண்ணம் தான் வைத் திருந்த கடிதத்தைச் சிவகாமியிடம் நீட்டினுள்.

சிவகாமி ஆவலோடு அக்கடிதத்தை வாங்கிப் பார்த்து வாய்விட்டுப் படிக்கலானுள்:—

மாது ஸ்ரீ சுந்தரத்தண்ணியம்மாளுக்குக் கட வுள் கிருபையால் சர்வ மங்களமும் உண்டாவதாக.

க்ஷேமம். தங்கள் க்ஷேமத்தைப்பற்றி அறிய விரும்புகிறேன். நகர வாசத்தையே பெரிதும் விரும்பி வந்த அம்பலவாணன் அங்குக் குதூகல மாகவே காலத்தைப் போக்கி வருகிறனென்ப தறிந்து மிகவுஞ் சந்தோஷிக்கிறேன். அவன் சீமைக்குச் சென்று பாஸ் செய்து வந்திருக்கி றன் என்பதை அறிந்த பலர், அவனுக்குப் பெண் கொடுக்க நான் முந்தி நீ முந்தி என்று போட்டி போட்டுக்கொண்டு வந்து என்னிடம் பேசிவருகி றர்கள். நான் ஒரு பெரிய இடத்தில் பெண் பார்த் திருக்கிறேன். சென்னையில் பிரபலஸ்தரான திவான்பகதூர் கந்தசாமி முதலியாரைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். அவர் சென்னை சர்க்கார் நிர்வாக மெம்பர்களில் ஒருவர். அவர் இரு பது லட்சத்துக்குச் சொந்தக்காரர். அவரது அவ் வளவு பெரிய சொத்துக்கும் வார்சாக ஒரே ஒரு மகள் தானிருக்கிறள். அவள் பெயர் தாமரைக் கண்ணி என்பது. அவள் அவ்வளவு அழகியென்று சொல்வதற் கில்லாவிடினும் மூக்கும் முழியுமாகப்

பார்ப்பதற்கு நன்ருக இருக்கிருள். இப் பெரிய இடத்துச் சம்பந்தம் நமக்கு அவ்வளவு சுலபத்தில் கிடைக்கக் கூடியதல்ல. இச் சம்பந்தம் நமக்குக் கிடைத்து விட்டால், நம் அம்பலவாணன் வெறும் பண்ணையாராக மட்டுமில்லாது, லட்சாதிபதியாகவும் ஆய்விடுவான். அத்துடன் திவான் பகதூர் கந்தசாமி முதலியார் செல்வாக்கினுல், கவர்ன் மெண்டிலேயே பெரிய உத்தியோகஸ்தனுகவும் போய்விடக்கூடும். அம்பலவாணனது நவ நாகரிகப் போக்குக்கு இந்த இடம் மிகவும் பொருத்தமாயிருக்குமென்று நான் நம்புகின்றேன். எதற்கும் அம்பலவாணனை உடனே சென்னைக்கு அனுப்பி வைக்கவும். அவனிடம் நான் கலந்து பேசி அவன் சம்மதத்தைத் தெரிந்து கொள்ளுகிறேன். பிறகு நீங்களும் சிவகாமியும் வந்து பெண்ணைப் பார்க்கலாம். மற்ற விஷயங்களைப் பின்னர் எழுதுகிறேன்.

இப்படிக்கு,
தங்கள் மைத்துனன்,
மா. தணிகாசல முதலியார்.

இதைப் படித்து முடித்ததும் சிவகாமி தாயை நோக்கி, "அப்பா சரியான இடமாகத் தான் பார்த்திருக்கிருரம்மா! அவர் சொல்லுகிறபடியே செய்வோம். தம்பியை உடனே கூட்டி சென்னைக்கு ………………" என்று கூறிக்கொண்டு வருகையிலேயே அம்பலவாணன் அங்கு வந்து விட்டான்.

அவன் என்னவெனக் கேட்பதற்குள், சுந்தரத் தண்ணியும் சிவகாமியும் விஷயத்தை விவரிக்க

லாயினர். இருவரும் ஆனந்த மிகுதியால் ஏககாலத்தில் இடைவிடாது பேசவே, அம்பலவாணன் ஒன்றும் விளங்காது சிரித்தான். பிறகு தன் தமக்கையின் கையிலிருந்த கடிதத்தை வாங்கிப் பார்த்த பிறகே விஷயமும் உணரலானான். சிற்றப்பாவின் செய்தி அவனுக்குப் புதிர்போல மனக்குழப்பத்தை யுண்டு பண்ணியது. ஒரு கணம் ஒன்றுந் தோன்றாமல் திகைத்து நின்றான். கடந்த ஒன்றரை மாத காலமாகத் தனபாக்கியத்தோடு தொடர்புகொண்டு இன்பந் துய்த்து வரும் அவனுக்கு, உடனே விவாகம் என்றதும் திகைப்பை யுண்டு பண்ணியது. தன்னுடைய மாறுதலை எங்கு தாயும் சகோதரியுங் கண்டு கொள்ளப் போகிறார்களோ என்று பயந்த அவன், ஏதோ சாக்கு கூறி விட்டு மெதுவாக அவ்விடத்தைவிட்டுத் தன் அறையை அடைந்தான். கடிதத்தை மீண்டும் ஒரு முறையல்ல; பலமுறை படிக்கலானான். கடிதத்தைப் படிக்கப் படிக்க மனக்குழப்பம் அதிகமாயிற்று. அறையின் குறுக்கும் நெடுக்குமாக உலவினான். 'விவாகம்; பெரிய இடத்துச் சம்பந்தம்; லட்சாதிபதி' என்று அவன் வாய் விட்டுவிட்டு முணுமுணுத்தது. அவன் கண்முன்னே தனபாக்கியத்தின் உருவம் தாண்டவமாடியது. அவன் அவளுக்குப் பலவிதமாக ஆசை வார்த்தைகள் கூறிப் பெரு நம்பிக்கையை உண்டு பண்ணியிருந்தான். ஆதலால் அவளை எப்படி கைவிடுவது என்று கருதும்போதே அவன் நெஞ்சம் மிகவுஞ் சஞ்சலமடைந்தது. அச்சமயம் தனபாக்கியம் 'என்னைக் கைவிடாதே' எனப் பரிதாபமாகக் கெஞ்

சுவதுபோல் தோன்றியது. ஆனாலும் சிற்றப்பா குறிப்பிடும் பெரிய இடத்துச் சம்பந்தத்தால் தனக்கு எதிர்காலத்தில் ஏற்படப்போகும் செல்வமும், செல்வாக்கும், பெருமையும், தனபாக்கியத்தின் தொடர்பால் தனக்கு ஏற்படக்கூடிய இழிவும் குறைவும் எதிரில் நின்று, 'உனக்கு இதுவா? அதுவா? எது வேண்டும்?' எனக் கேட்பது போலிருந்தன. வெகுநேரம் அவன் மனத்தில் தீவிரப் போராட்டம் நடைபெற்றது. கடைசியாக, அவன் மனம் பெரிய இடத்துச் சம்பந்தத்தையே பெரிதாகக் கருதி அதையே நாடியது. அப்படியானல் ஏழை தனபாக்கியத்தின் கதி என்ன? 'அவள் பணிப் பெண்தானே! ஏதோ மற்ற வேலைகளை இட்டுப் பயன்படுத்திக் கொள்வதுபோல், தனது மிருக இச்சையைத் தீர்த்துக் கொள்வதற்கு அவளைப் பயன்படுத்திக் கொண்டதைத் தவிர வேறென்ன பிரமாதம்!! அதற்கு வேண்டுமானல் காசை விட்டெறிந்தால் போகிறது? அதற்காக அவளை ஆயுள் முழுதும் கட்டியழ முடியுமா? சனியன். என் தகுதிக்கு வைப்பாட்டியாகக்கூட அவளை வைத்துக்கொள்ள முடியாதே! ஆமாம். அவளது ஜீவியத்துக்கென்று ஏதோ கொஞ்சம் பணத்தைக் கொடுத்துத் தொலைத்து விடுவோம்.' இவ்விதம் எண்ணியது அம்பலவாணன் மனம். தனபாக்கியத்தைப் போன்ற ஏழைப் பெண்ணின் விலை மதிப்பற்ற கற்பு அம்பலவாணன் போன்ற செல்வத் திமிர் பிடித்த வாலிபர்களுக்குக் கடைகளில் விற்கப்படும் சாமான்களைப் போன்ற தொன்ருகப்பட்டதில் ஆச்சரிய மொன்றுமில்லை.

தனபாக்கியத்தைப் போன்ற எத்தனைப் பேதைப் பெண்கள், விளக்கொளி கண்டு மோகித்து மடியும் விட்டில் பூச்சிகளைப் போல், அம்பலவாணன் போன்ற விட வாலிபர்களின் நாகரிகத் தோற்றத்திலும் நயவஞ்சக வார்த்தைகளிலும் மயங்கித் தங்கள் அருஞ் செல்வமான கற்பைப் பறிகொடுத்துப் பின்னர் நடுத்தெருவில் நிற்கின்றனர்; பாழாகின்றனர்.

## ஐந்தாம் அதிகாரம்

அம்பலவாணனது சென்னைப் பிரயாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் தயாராகி விட்டன. அவன் எல்லோரிடமும் சொல்லிவிட்டுப் புறப்பட வேண்டியதே பாக்கி. திடீரென ஏற்பட்ட இம் மாறுதல் தனபாக்கியத்துக்குத் திகைப்பை யுண்டுபண்ணி விட்டது. அவளுக்கு ஒன்றும் புலப்படவில்லை. 'அம்பலவாணன் ஏன் திடீரென சென்னைக்குப் போகிறான்? அவ்வளவு அவசரத்துக்குக் காரணமென்ன? மீண்டும் ஊருக்குத் திரும்பி வருவானா? வழக்கம்போல் நேற்று மாலை அவனைச் சந்தித்திருந்தால் விஷயந் தெரிந்து கொண்டிருக்கலாமே' என்றெல்லாம் அவள் மனம் எண்ணி ஏங்கித் தவித்தது. ஒரு வேலையைச் செய்வதும், அம்பலவாணன் எங்கிருக்கிறான்; என்ன செய்கிறான் என எட்டிப் பார்ப்பதுமாகவே அவள் தவிக்கலானாள். இச் சமயத்தில் அம்பலவாணன் அவள் இருக்கும் பக்கமாக வந்து அவளை மேன்மாடிக்கு வரும்படி சைகை

காட்டிவிட்டுச் சென்றான். தனபாக்கியம் சுற்று முற்றும் பார்த்துவிட்டு ஓடோடியும் சென்றாள்.

இவள் வரவை எதிர்பார்த்திருந்த அம்பலவாணன், "தனம், நான் சென்னைக்குப் போகிறேன். வெகு அவசரம். பேச நேரமில்லை. இந்தா இதை எடுத்துக்கொள்" என்று கூறியவாறு நூறு ரூபாய் நோட்டுக் கத்தையைத் தங்களுக்கு இடையே இருந்த மேஜைமீது வீசியெறிந்தான். அவனது குரல் ஒருவிதமாகத் தொனித்தது. அவனது முகம் சலனமற்ற சலவைக்கல் போல் காணப்பட்டது. அவன் தனபாக்கியத்திடம் இதற்குமுன் பழகாதவன் போல் தூர நின்று பேசினான். நோட்டுக்களை அவள்கையில் கொடுக்கக்கூட அவனுக்கு மனமில்லை.

அம்பலவாணன் தன்னிடம் விடை பெற்றுச் செல்லவே கூப்பிடுகிறான் என்ற ஆர்வத்தோடு வந்த தனபாக்கியம், அவனது நடத்தையைக் கண்டு ஏமாற்றமடைந்து பின் வாங்கினாள். அவளையறியாமலே அவள் வாய், "இது என்ன? இது எதற்கு?" என்று வினவியது. அவள் கண்களினின்றும் நீர் துளித்து கன்னங்களின் வழியாக வழிந்தோடியது.

அம்பலவாணன் தனபாக்கியத்தின் அப்போதைய நிலைமையை ஒரு கணத்தில் உணர்ந்து கொண்டான். ஆயினும் அவளை ஏறிட்டு நோக்கி அவளுக்கு இதமான வார்த்தைகளைக் கூற அவன் மனம் இசையவில்லை. அவன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டு விரைப்பாக நின்றான்.

ஏனென்றால், அவளது அப்போதைய பரிதாப நிலையைக் கூர்ந்து நோக்கினால் எங்குத் தன் மனம் மாறுதலடைந்து சென்னைப் பயணத்தை நிறுத்தி விட நேருமோ என அவன் அஞ்சினான். ஆதலால் அவன் சீக்கிரம் விவகாரத்தை முடித்துவிட்டு அவ்விடத்தி னின்றும் போய்விட வேண்டுமென்று துடிதுடித்தான். ஆகவே, அவன் தன் முகத்தை வேறு பக்கந் திருப்பிக்கொண்டு, "இது நான் உனக்கு அளிக்கும் வெஃகுமதி..........." என்று கூறி மேலே ஏதோ கூற வாயெடுக்கையில், தனபாக்கியம் இடைமறித்து, "வெகுமதியா? எனக்கா? எதற்காக?..........." என்று கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனாள். இவ்வினாக்கள் அம்பலவாணனின் நெஞ்சத்தில் கூரிய அம்பு பாய்வதுபோல ஊடுருவிப் பாய்ந்து சுருக்கெனத் தைத்தன.

இவ்வினாக்களுக்கு என்ன பதில் சொல்வதென்று அவனுக்குத் தோன்றவில்லை. 'ஒன்று மறியா இளம்பெண்ணான உன்னை, என் மிருக இச்சையைப் பூர்த்தி செய்துகொள்ளப் பயன் படுத்திக் கொண்டு பாழ் படுத்தியதற்காக இந்த ரூபாய் பரிசு' என்றா சொல்லுவான்? அவ்வாறு கூறத்தான் அவனுக்கு மனம் வருமா? குற்றமுடைய மனமல்லவா? எனவே, வெட்கத்தால் அவனுடைய உடல் குன்றியது. ஒரு பெண்முன்—ஒரு ஏழைப் பெண்முன்—அதுவுந் தன் அதிகாரத்துக்குட்பட்ட ஒரு வேலைக்காரப் பெண்முன்—தான் பேசமாட்டாது குற்றவாளிபோல் நிற்பது அவனுக்கு மிகவும் அவமானமாகப் பட்டது. எனவே அவன் சரேலென அவ்விடத்தினின்றும் விரை

வாக நடந்து, தடதடவென மெத்தைப் படிக்கட்டுக் களின் வழியாக இறங்கிக் கீழே போய்விட்டான். தனபாக்கியம் திடுக்கிட்டு, அவன் போவதைத் திரும்பிப் பார்த்தவள் வெகுநேரம் வரை அப் படியே பதுமைபோல் திகைத்து நின்று விட்டாள். மேஜைமீது வைக்கப்பட்ட 'கரன்ஸி நோட்டுக்கள்" காற்றினால் பறந்து சிதறிக் கீழே விழுந்து கிடந் தன. துக்க மிகுதியால் தனபாக்கியத்துக்கு நெஞ் சம் வெடித்து விடும்போலிருந்தது. கொல்லன் உலையில் காற்றூதும் துருத்திபோல் நாசித்துவா ரம் பெருமூச்சை வெளிவிட்டுக் கொண்டிருந்தது. இவ்விதம் உயிர்ப் பெழுந்தோறும் அவளது கொங்கைகள் விம்மி விம்மி அடங்கின. அவளு டைய மனத் திரையில், சென்ற ஒரு மாதகால காத லனுபவங்கள் காட்சி யளிப்பதும் மறைவதுமா யிருந்தன. கரு விழிகளி லிருந்து பெருக்கெடுத்து ஓடிய நீரால், அவளது கிழிந்த சேலை முந்தானையும் நனைந்தது. சிறிது நேரம் வரை தன்னுணர்வற்று அவள் நின்றிருந்தாள்.

கீழே ஏற்பட்ட சடுபுடு வென்ற சந்தடியும், மனிதர்களின் பேச்சு ஆரவாரமும், அவளைத் தன் னுணர்வு கொள்ளச் செய்தன. அம்பலவாணன் ரயிலடிக்குச் செல்வதற்காக வண்டி வந்து நின்ற ஓசை அதே சமயம் கேட்கவே, தனபாக்கியத் தின் மனம் அம்பலவாணனைக் கடைசி முறையாக வாயினும் பார்க்கலாமென்று அவாவியது. கீழே இறங்கிப் போய்ப் பார்க்கலாமா? அல்லது மேன் மாடியிலேயே முன் தாழ்வாரத்திற்குப் போய் நின்று, அம்பலவாணன் வண்டியி லேறுவதையும்

செல்வதையும் காணலாமா? இவ் வாராய்ச்சியில் அவள் மனம் சில விநாடி ஈடுபட்டிருந்தது. 'மாடியி லிருந்தவாறே பார்ப்பதுதான் நல்லது; அவனை வழியனுப்பும் முயற்சியில் யாவரும் ஈடுபட்டிருப்ப தால், இங்கு எவரும் வர மாட்டார்கள்; ஆதலால், அப்போதுதான் சௌகரியமாக அவனைப் பார்க்க முடியும்' என்ற தீர்மானத்துக்கு வந்த தனபாக்கி யம், முன்வராந்தாவுக்குக் காலெடுத்து வைத்தாள். இதற்குள் அவள் மனம் மாறிவிட்டது. 'என்னை வஞ்சித்துவிட்டுச் செல்லும் சண்டாளனையா பார்ப் பது? என் கற்பைக் களவாகக் கவர்ந்த கள்வ னையா பார்ப்பது? இதுவரை என்னுடன் பழகிய தோஷத்துக்காகக் கூட ஒரு நல் வார்த்தை சொல்லிவிட்டுப் போக மனம் வராத கல்நெஞ்சக் காதகனையா பார்ப்பது? நன்றிகெட்ட பாதகன்' என்று அவள் வாய் பிதற்றியது. அச் சமயம் அவளது கண்கள் கோவைப் பழம்போல் சிவந் தன. அவள் உடம்பு நெருப்பாகத் தகித்தது. அவளுடைய ஒவ்வொரு அவயவமும் படபடத்தது. இவ்விதம் மனத்தோடு போராடிக் கொண்டிருக் கையிலேயே, வண்டி அம்பலவாணனை ஏற்றிச்செல் கிறது எனக் கூறுவதுபோல், காளைகளின் கழுத் துக்களை அழகு செய்து கொண்டிருந்த சதங்கை மணிகளின் ஓசை 'ஜில், ஜில்' எனக்கேட்டது. இவ் வினிய ஓசையைச் செவியுற்றதும், தனபாக்கி யத்தின் மனத்தில் ஒருவித எழுச்சி யுண்டாகி, அவ ளைத் தாழ்வாரத்துக்கு உந்தித் தள்ளிச் செல்ல முயன்றது. ஆனால் அவளது கால்கள் நகரவில்லை. இருக்க இருக்க சதங்கை மணியோசை குறைந்து

கொண்டே வந்தது. அவ்வோசை அவள் செவிக்கும் கேளாதவாறு அடங்கும் அதே கணத்தில் தனபாக்கியம் மனக் கிளர்ச்சி தாங்கமாட்டாது மூர்ச்சையுற்றுக் கீழே விழுந்தாள். அம்பலவாணன் நிலை என்ன? தனபாக்கியத்தை விட்டுச் சென்ற அவன், இயந்திரம்போல் இயங்கி, தாய் தமக்கையரிடமும், மற்றவரிடமும் விடை பெற்றுக் கொண்டு வண்டியில் ஏறிச் சென்றான். வண்டியில் அவனது பூதவுடல்தான் சென்றதேயொழிய அவனது உயிரும் மனமும் தனபாக்கியத்தினிடமும், இவனிடமுமாக ஊசலாடிக் கொண்டிருந்தன.

## ஆறும் அதிகாரம்

“தனம்! தனம்!! இதென்ன அலங்கோலம்? ஏன் இப்பிடி தரையிலே விழுந்து கிடக்கிறே!....” என்று கூறியவாறே பதறிக்கொண்டு குடிசைக்குள் ஓடி வந்தாள் பெருந்தேவி.

தனபாக்கியம் பேச்சு மூச்சின்றி நிலத்தில் விழுந்து கிடந்தாள். அவளது கூந்தல் அவிழ்ந்து அலங்கோலமாய்ப் புரண்டு கிடந்தது. உடைகள் சீர்குலைந்து காணப்பட்டன. பண்ணையார் வீட்டில் வேலை செய்துவிட்டு அப்போதுதான் தன் குடிசையை அடைந்த பெருந்தேவி, எதிர்பாராதவாறு தன் நினைவற்று விழுந்து கிடக்கும் மகளைக் கண்டு திடுக்கிட்டாள். சில மாதங்களாகவே தனபாக்கியம், இயற்கையாக வுள்ள மகிழ்ச்சியும் குதூகலமுமின்றிக் காணப்படுவதைப் பெருந்தேவி கவ

ணித்து வந்திருக்கிறாள். அதுவன்றி, தான் இல்லாத சமயங்களில் தன் மகள் மனங்குமுறி அழுது கொண்டிருப்பதையும், தன்னைக் கண்டதும் தன் துயரத்தை மறைத்துக்கொண்டு வருவதையும் அவள் பல தடவை பார்த்திருக்கிறாள். அவளது வருத்தத்திற்குக் காரண மென்னவென்று பெருந்தேவி நயமாகவும் பலவிதமாகவும் வினவியும், தனபாக்கியம் ஒன்றுங் கூறாமலே இருந்து வந்திருக்கிறாள். மிகவும் வற்புறுத்திக் கேட்டால், 'ஒன்றுமில்லையே; எப்போதும் போல்தானே இருந்து வருகிறேன்' என்று ஏதோ கூறி மழுப்புவாள். "வயசாய் விட்டதோ இல்லையோ! ஊர்ப் பெண்களைப் போலத் தானும் கலியாணஞ் செய்துகினு புருஷனோடே கூடி வாழ்வதற்கில்லியே என்ற வருத்தமா யிருக்கலாம். அதை என்கிட்டே கூறக் கூச்சப்படுகிறாள், பாவம். அவள் அப்பன் இருந்தால் இந்நேரம் எப்பாடு பட்டாயினும் தன் பெண்ணுக்குக் கலியாணஞ் செய்து கண்ணிலே பார்த்திருக்க மாட்டாங்களா!........" என்று எண்ணி ஒரு விதத்தில் வருத்தமும், மற்றொரு விதத்தில் மனத்தேறுதலும் அடைவாள். பாவம்! பேதைப் பெருந் தேவிக்குத் தனபாக்கியத்தின் உண்மை நிலையும் இரகசியமும் எப்படித் தெரியும்? ஆகவே அவள் முதலில் குடிசையினுள் நுழையும்போது வழக்கம்போல் தனபாக்கியம் தரையில் படுத்து அழுது கொண்டிருக்கிறாள் என நினைத்தாள். அவளைச் சமீபித்த பிறகுதான், அவள் உணர்வற்று விழுந்து கிடக்கிறாள் என அறிந்து பெருந்தேவி அலறி யடித்துக் கொண்டு ஓடினாள்.

ஓடியவள் மகளைத் தன் மடிமீது எடுத்துச்சார்த்திக்கொண்டு, முந்தானையால் முகத்தில் விசிறி, ஆஸ்வாசப் படுத்தலானாள். தனபாக்கியத்தின் முகம் வெளிறோடி யிருந்தது. மூச்சும் இருதயத் துடிப்பும் இருந்து கொண்டிருப்பதைக் கொண்டு அவளுக்கு உயிர் இருக்கிறது என்று அறிந்து கொள்ள முடிந்ததே யொழிய, மற்றப்படி அவள் சடம் போலவே காணப்பட்டாள். தனபாக்கியத்துக்கு மூர்ச்சை தெளியாததைக் கண்ட பெருந்தேவி, மேலும் மனம் பதறியவளாய்ப், பழையபடி அவளைத் தரையில் கிடத்திவிட்டு, ஓடோடிப்போய் ஒரு மூலையில் வைக்கப்பட்டிருந்த மண் பானையிலிருந்து தண்ணீரைக் கைகளில் அள்ளிக்கொண்டு வந்து முகத்தில் தெளித்தாள். வாயைத் திறந்து கொஞ்சம் நீரைப் புகட்டினாள். ஆடையைத் தளர்த்தி விட்டால் மூச்சு தாராளமாய் வருவதற்குச் சௌகரியமாய் இருக்கும் எனக் கருதிப் பெருந்தேவி இடையில் அழுத்தமாகக் கட்டப்பட்டிருந்த தனபாக்கியத்தின் சேலையைத் தளர்த்த முயன்றாள். அவ்விதஞ் செய்கையில், தனபாக்கியம் சிறிது புரண்டு கொடுத்தாள். அப்போதுதான் சிறிது சிறிதாக அவளுக்கு உணர்வு வந்துகொண்டிருந்தது. தனபாக்கியம் மூர்ச்சை தெளியமாட்டாளா என்ற ஆவலோடு, அவளுடைய ஒவ்வொரு அங்க அசைவையும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த பெருந்தேவி, திடீரென ஏதோ தேள் கொட்டியவள் போல் துடி துடித்து எழுந்தாள். மீண்டும் குனிந்து தன் மகளின் வயிற்றை நோக்கினாள். அவளுக்கு உதித்த சந்தேகம் இன்னும்

அதிகமாயிற்று. அதற்குப் பிறகுதான் தனபாக்கியத்தின் தேகத்தில், கர்ப்பக் குறிக்கான பச்சை நரம்புகள் ஓடுவது பெருந்தேவியின் கண்களுக்குப் புலப்பட்டது. "ஐயோ" என அவளை யறியாமலே வாய் அலறியது. முகவாய்க் கட்டையைத் தாங்கிய கரங்கள் குளிர் கொண்டவை போல் நடுங்கின.

மெல்ல மெல்ல உணர்வை யடைந்த தனபாக்கியம, தாயின் கூக்குரலைக் கேட்டுத் திடுக்கிட்டு விழிப்படைந்தாள். தான் காண்பது கனவா? நனவா? உண்மையா? பொய்யா? என அறியாது பெருந்தேவி மயங்கினாள். கண்களை நன்றாகத் துடைத்துக் கொண்டு கூர்ந்து மகளை நோக்கினாள். ஏற இறங்கப் பார்த்தாள். மருள மருள விழித்தாள். அவளது செய்கை, பைத்தியங் கொண்டு விட்டாளோ என்று எண்ணும்படியாக இருந்தது. தன் மகளின் களையை நீக்கவேண்டுமே என்ற எண்ணமே அவளுக்கு அச்சமயம் இல்லாது போய்விட்டது. தன் மகள்மீதிருந்த அன்பும் பரிவு மெல்லாம் அவளுக்கு இப்போது வெறுப்பும் கோபமுமாக மாறிவிட்டன.

தனபாக்கியம் தட்டுத் தடுமாறி யெழுந்தாள். தன் முன்னே தாய் ஒரு விதமாக வெறித்துப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டு திடுக்கிட்டாள். தன் நிலையை அன்னை அறிந்துகொண்டாளோ என மனத்தில் பயங்கொண்டு வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள். அவசர அவசரமாக உடைகளைச் சீர் திருத்திக்கொள்ளத் தொடங்கினாள்.

பெருந்தேவிக்கு ஆத்திரம் அதிகரித்தது. "தனம்! இதென்னடி கோலம்?" என்று கேட்டாள். அவ்வார்த்தையில் கடுமை காணப்பட்டது.

தாயின் மாறுதலைக் கண்டு தனபாக்கியம் இன்னும் பீதி கொண்டாள். நா தழுதழுப்போடு, "ஒன்றுமில்லை; கொஞ்சம் மயக்கமாயிருந்தது" என்று மெதுவாகக் கூறினாள்.

"மசக்கை மயக்கமா?......." என கர்ஜித்தாள் பெருந்தேவி.

"அம்மா! அம்மா!......." என நடுக்கத்தோடு கூப்பிட்டுக் கொண்டே தாயின் காலில் விழுந்தாள் தனபாக்கியம்.

"என்னடி அம்மா!.............. பாசாங்கு பண்ணறே! நிஜத்தைச் சொல்றையா; என்ன!" என்று அதட்டிக் கேட்டாள்; ஆயினும், தன் மகளின் பரிதாப நிலையைக் கண்டதும் அவளது மனம் இளகி விட்டது. உடனே அவள் கீழே குனிந்து தனபாக்கியத்தைத் தூக்கியெடுத்துத் தழுவிக்கொண்டாள்.

"அம்மா! என்னை மன்னிப்பாயா? என் மீது கோபங் கொள்ளமாட்டாயே!..........." என்று தனபாக்கியம் மிக உருக்கமாகக் கேட்டாள்.

"ஊஹூம்.............." எனத் தலையை யசைத்தாள் பெருந்தேவி.

"அம்மா, நான் பிறந்து உன் வயிற்றையும், குலத்தையுங் கெடுத்து விட்டேன்..........." என்று கூறிப் பொருமினாள்.

"ஐயோ........" என மீண்டும் அலறினாள் பெருந்தேவி. தானாகவே தனபாக்கியத்தின் நிலையை ஊகித்து அறிந்துகொண்டு, அதன் விளைவு என்னாகும் என எண்ணிப் பார்த்து மனம் புண்பட்டுள்ள பெருந்தேவி, மகள் வாயாலேயே 'உன் வயிற்றையும் குலத்தையுங் கெடுத்து விட்டேன்' என்று கூறியபோது, இன்னம் அதிக மனவேதனையடைந்து வாய்விட்டுக் கதறினாள். பெருந்தேவி தனபாக்கியத்தின் கன்னித்தன்மை யழிவதற்குக் காரணமாயிருந்தது யார் என மெல்ல வினவ, தனபாக்கியம் தனக்கும் பண்ணைச் சின்ன எஜமான் அம்பலவாணனுக்கும் ஏற்பட்ட நட்பையும், பின்னர் அதன் விளைவாக ஏற்பட்ட பயனையும் தயங்கித் தயங்கிக் கூறினாள்.

இதைக் கேட்டதும் பெருந்தேவி, "அம்பலமா உன் தலையில் கையை வைத்தான்? அடபாவி! இங்கு என் குடியைக் கெடுத்துவிட்டுப், பட்டணத்தில் போய்ப் பெரிய இடத்துப் பெண்ணைக் கலியாணஞ் செய்துகினு குபேர வாழ்வு வாழறானே! அவன் நல்லா இருப்பானா?...........ஐயோ! அவன் தான் பசப்பினாலும் நீ அதையெல்லாம் நம்பலாமா! பண்ணை வீட்டுப் புள்ளை நமக்கு ஈடு ஜோடாகுமா? அதைக் கனவிலே கூட நினைக்க முடியுமா? இது கூட தெரியாதா உனக்கு?...........நெருப்பை மடியிலே கட்டியிருப்பது போல, உன்னை வைத்துக் கட்டிக்காத்துக்கினு இருந்தேனே; அப்படிப்பட்ட என் வயிற்றில் நெருப்பை மூட்டி வைத்திட்டியே!—தனம்! நான் இனி என்ன செய்வேண்டி! நாம்

எவ்விதம் வாழ்வோமடி! அம்பலம் பட்டணத்துக்குப் போனதும், நீ பண்ணையார் வூட்டில் இருக்க மாட்டேன்னும், பழையபடி நம்ம குடிசைக்கே போய்டுவோமின்னும் வற்புறுத்தியதன் அர்த்தம் இப்பத்தானே தெரியுது? இதையெல்லாம் அறியாம நான் மோசம் போயிட்டேனே! நீ இப்பிடி கெட்டுப் போயிட்ட சங்கதி தெரிந்தால், உன்னை யாரடி வந்து கட்டிக்கொள்வான்? நம்ம ஜாதியார் அறிந்தால், நம்ம சமூகத்திலிருந்து தள்ளி வைத்திடுவார்களே! அப்புறம் நாம் எப்பிடி வாழ்வது? உலை வாயை மூடினாலும் மூடலாம்; ஊர்வாயை மூட முடியாதே!...........எப்படியோ விஷயம் மிஞ்சிவிட்டது! இதை யாருக்குந் தெரியாமல் மூடிவைக்க வேண்டுமே! பக்கத்தில் நம்ம ஜாதிக் கிழவி யொருத்தியிருக்கிறாளே! அவள் ஊர்க்கொள்ளி யாயிற்றே! அவளுக்குத் தெரிந்தால் ஊரில் கொளுத்திவிடுவாளே;..............'' என்று ஆற்றாமையோடு கூறினாள். அச் சமயத்தில் பெருந்தேவி போட்ட கூச்சலைக் கேட்டு ஓடிவந்த குப்பாயிக் கிழவி, வெளிப்புறத்து மறைவில் நின்று உள்ளே என்ன நடக்கிறது என்று ஒட்டுக்கேட்டுக் கொண்டிருந்தாளாதலால், தன்னைப் பற்றி பிரஸ்தாபம் வந்ததும் மெள்ள அவ்விடத்தினின்றும் நழுவித் தன் குடிசையை யடைந்தாள். தாயும் மகளும் ஒருவரையொருவர் சேர்த்துக் கட்டிக்கொண்டு அழுதனர்.

## ஏழாம் அதிகாரம்

நல்ல மையிருட்டு. மணி பன்னிரண்டரையிருக்கும். ஒரே அந்தகார மயமாய்க் காணப்பட்ட

அந் நள்ளிரவில் பருத்த மரங்களும் செடி கொடிகளும் காற்றினல் மெல்ல அசைந்து, பேய் தலைவிரித்தாடுவது போன்ற பயங்கரத் தோற்றத்தை யளித்துக் கொண்டிருந்தன. சகல ஜீவராசிகளும் செயலற்றுக் கண்ணுறங்கும் வேளையாதலால், உலகமே மோன நிலையிலிருப்பது போல் எங்கும் ஒரே அமைதி நிலவி யிருந்தது. இந் நள்ளிருளில் ஒரு குடிசையில் இருந்து இரு உருவங்கள் வெளிப்பட்டுச் சுற்று முற்றும் பார்த்துக்கொண்டு தெற்கு நோக்கி நடக்கலாயின. அவைகளில் உயரமாகவும் பருமனகவுமிருந்த உருவம், திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு, சிறிய உருவத்தைப் பரபர வென இழுத்துக்கொண்டு போயிற்று. கடைசியில் இரு உருவங்களும் ஊர்ப்புறத்தே யுள்ள ஒரு மைதானத்தை யடைந்தன.

பெரிய உருவம் ஓரிடத்தில் நின்று கீழே குனிந்து பரபரவென நிலத்தைத் தோண்டிக் குழி யுண்டாக்கிற்று. பிறகு அது கண்களில் நீர்வாரச் செயலற்று நின்றிருக்கும் சிறிய உருவத்தின் தோளைப் பற்றி யிழுத்து, “தனம்! சீக்கிரங் கொண்டா! யாராச்சம் பார்த்தூடறத்துக்கு முந்திப் புதைச்சுட்டுப் போயிடனும்; ரோந்து வரும் தலையாரி முனியன் கண்ணிலே பட்டுட்டா அப்புறம் ஆபத்துத்தான்....இப்படி வா” என்று கூறிய வண்ணம் அதன் கையில் வைத்திருந்த வஸ்துவை வாங்க முயன்றது.

“அ........ம்........மா!........” என்று தழுதழுப்பான குரலில் கூறிய வண்ணம் தன் கையில் வைத்

திருந்த பொருளை நோக்கியவாறே கீழே உட்கார்ந்தாள் தனம்.

பெருந்தேவி துடி துடிப்போடு, "தனம், வருத்தப் படறதுக்கு இது நேரமல்ல...........சென்றதைப் பற்றி நினைக்காதே. அந்தமட்டும் நம்ப பிரயத்தனமில்லாமலே குழந்தை இறந்துபோனது நல்லதாப் போச்சு. இல்லாப்புட்டா நம்ம கதி அதோ கதிதான். நீ கருப்பமாயிருந்ததை மற்றவங்க அறியாமே மறைத்து வைத்திருந்ததற்கே பிராணன் போயிடுத்தே. அப்புறம் குழந்தையும் உயிரோடிருந்தா அதை எப்படிக் காப்பாத்தறது....தெய்வந்தான் நம்ம பக்கமிருந்து நம் மானத்தையும் நம்ம குடும்ப மானத்தையுங் காப்பாத்திற்று. இல்லாவிட்டா இத்தனை நாள் நாம் பிழைத்த பிழைப்பெல்லாம் நாய் பிழைப்பா போயிட்டிருக்கும்........ ஊம்; நாம் என்ன செய்றது; நாம் வந்த வழி இது...........குழந்தையை இப்படிக் கொண்டா" என்று கூறியவாறே குழந்தையை மகளிடமிருந்து வாங்கினாள்.

தனபாக்கியம் இதுவரை அடக்கி வைத்திருந்த துக்கந் தாங்கமாட்டாமல் மனங் குமுறினாள். தான் பெற்றெடுத்த குழந்தை புதைக்கப்படுவதைக் காணச் சகியாதவளாய் முகத்தை வேறு பக்கந் திருப்பிக்கொண்டு தேம்பித் தேம்பி யழுதாள். பெருந்தேவி ஒரு நொடியில் குழந்தையின் பிரேதத்தைப் பூமியில் அடக்கஞ் செய்துவிட்டு, மகளை எழுந்திருக்கச் சொன்னாள். தனபாக்கியம் குழந்தை தன்னைவிட்டு நீங்கி,நிலத்தில் ஐக்கியமாய்

விட்டது என்று தெரிந்ததும், அனலில் பட்டபுழுப் போல் துடி துடித்து, சமாதிமீது மூர்ச்சையானாள். அவளைத் தேற்றி வீட்டுக்கு அழைத்துப் போகப் பட்ட பாடு, பெருந்தேவிக்குப் பெரும்பாடாய்ப் போய்விட்டது.

## எட்டாம் அதிகாரம்

அதிகாலை. ஊர்ச்சந்தைக்குப் போகும் வழியில் ஒரே ஜனக்கூட்டம். குழுமியிருந்த கிராமவாசிகள் தங்களுக்குள் ஏதோ பேசி அங்கலாய்த்துக்கொண்டிருந்தனர். இதற்குள் போலீஸ் புலிகள் அங்கு வந்து ஜனங்களை நீக்கிக்கொண்டு உள்ளே நுழைந்தனர். அவர்கள் அங்குக் கண்டதென்ன! பாதி திறந்துள்ள ஒரு கைப்பெட்டியில் அன்றே பிறந்த ஒரு குழந்தையின் பிரேதம் வைக்கப்பட்டிருந்தது. குழந்தையின் கழுத்து முறிக்கப்பட்டிருந்தது. இச் சிசுஹத்தி செய்தது யார்? இக்கோர சம்பவத்துக்குக் காரணகர்த்தா யார்? குழந்தையைப் பெற்றெடுத்த பெண் யார்? இவ்விதம் பல கேள்விகள் எழுந்து, போலீஸாரையும் ஜனங்களையும் குழப்பியது. கடைசியில் போலீஸார் குழந்தையின் பிரேதத்தைக் கைப்பற்றிச் சென்றனர். உளவறியத் தீவிரமாக முயற்சியெடுத்துக்கொள்ளப்பட்டது. கிராம ஆஸ்பத்திரி லேடி டாக்டர், நர்ஸுகள் சகிதம் ஒவ்வொரு குடிசையிலும் நுழைந்து பெண்களைப் பரிசோதிக்கலானார். ஏனென்றால் சமீபத்தில் பிரசவித்தவர்கள் யார் யார் என்று அறிந்துகொண்டால், குற்றவாளியை ஒருவாறு கண்டு பிடிக்கலாமல்லவா! குப்

பாயிக் கிழவி யிருக்குமிடத்துக்கு லேடி டாக்டர் வந்ததும், அவள் பக்கத்துக் குடிசையைக் கண் காட்டி விட்டாள். எனவே, லேடி டாக்டரும், நர்ஸுகளும் பெருந்தேவியின் குடிசைக்குள் நுழைந்தனர். யாரோ சிலர் வருவதைக் கண்டதும், கண்ணீரும் கம்பலையுமாகப் படுத்திருந்த தனபாக்கியம் திடுக்கிட்டு எழுந்தாள்.

உள்ளே நுழைந்த லேடி டாக்டர் மருள மருள விழிக்கும் தனபாக்கியத்தை ஒருவிதமாகப் பார்த்துப் பிறகு, "ஏனம்மா! இங்கே உன்னைத் தவிர வேறு யாருமில்லையா? நீ மாத்திரமா தனியாய் வசிக்கிறாய்?..........."என்று கேட்டார்.

தனபாக்கியம் மனப் பீதியால் வாய் குழற, "இ—ல்—லை....எங்க அம்மா".......என்று கூறி வருகையில், இவளை முடி முதல் அடிவரை ஏற இறங்க ஒருமுறை பார்த்துத் தலையை யசைத்த லேடி டாக்டர் இடைமறித்து, "உங்க அம்மா எங்கே?......." என்று அதிகார தோரணையில் கேட்டாள்.

"அ—வ—வேலை—செய்ய, ப—ண்ணை—யார்.... ....வீட்டுக்குப் போயிருக்கிறா......."என்று அச்சத் தோடேயே கூறினாள்.

லேடி டாக்டர், "அது கிடக்கட்டும். உனக்குக் கலியாணமாகி யிருக்கிறதா!......." என்று நயமாகக் கேட்டாள்.

"இ—ல்—லை" எனக் கூறியபோது, தனத்தின் எண்சாணுடம்பு ஒரு சாணாகக் குன்றியது.

"இல்லையா? நீ பிள்ளை பெற்றிருக்கிற மாதிரி தெரிகிறதே! அது எப்படி?.......அப்படியானால் நாங்கள் உன்னைப் பரிசோதித்துப் பார்க்கவேண்டும்......." என்று லேடி டாக்டர் பதட்டத்தோடு கேட்டாள்.

லேடி டாக்டர் இவ்விதங் கூறியதுமே, தனபாக்கியம் தலைசுழன்று கீழே விழுந்தாள். லேடி டாக்டர் கட்டளையை நிறைவேற்ற விரைந்து, தனபாக்கியத்தை அணுகி வந்த நர்ஸுகள் ஒன்றுந் தோன்றாது திகைத்து நின்றனர். சிறிதுநேரத்திற்குப் பின்னர் லேடி டாக்டர் நர்ஸுகளைக்கொண்டு ஒருபுறம் தனபாக்கியத்தின் மூர்ச்சையைத் தெளிவித்துக்கொண்டே மற்றொரு புறம் தான் வந்த வேலையைக் கவனிக்கலானாள். இப் பரிசோதனையில் தனபாக்கியம் சமீபத்தில்தான் பிரசவித் திருக்கிறாள் எனச் சந்தேகமறத் தெரிந்ததால், லேடி டாக்டர், தனந்தான் தவறானநெறியில் சென்றோ, வேறெவ்விதமாகவோ ஏற்பட்ட கர்ப்பத்தால் திருட்டுத்தனமாகப் பிள்ளையைப் பெற்று மேற்குறித்தவாறு கழுத்தை நெறித்து, டிரங்குபெட்டியில் அடக்கஞ்செய்து, தெருவில் எறிந்திருக்கிறாள் என்று தீர்மானித்துவிட்டாள். ஆகவே, ஒரு நர்ஸை அருகே அழைத்து, அவளது காதில் ஏதோ ஓதினாள். உடனே அவள் வெளியே சென்றாள். இதனிடையே, பெருந்தேவி வீடு திரும்பினாள். அவள் தன்குடிசையில் யாரோ இருப்பதையும், தன் மகள் மூர்ச்சித்து விழுந்து கிடப்பதையும் கண்டதும், திடுக்கிட்டு அலறியடித்துக்கொண்டு உள்ளே ஓடி வந்தாள்.

"என்ன! என்ன!! என் மகளுக்கு என்ன நேர்ந்தது?...."என்று கேட்டவாறு நெருங்கினாள்.

லேடி டாக்டர், அவளை ஒருவிதமாக நோக்கிய வண்ணம், "உன் மகளுக்கு ஒன்றுமில்லை. பிரசவம் ஆனபிறகு ஏற்பட்ட பலவீனமும், களைப்பும் இன்னும் நீங்கவில்லை போலிருக்கிறது. அதனால் திடீரென்று மூர்ச்சையாகி விழுந்தாள். வெளியே போய்க்கொண்டிருந்த நாங்கள், இவள் விழுந்த சப்தத்தைக் கேட்டு ஓடிவந்தோம்...............ஆமாம். குழந்தை எங்கே?" என்று சாதுரியமாகப் பேசி பெருந்தேவி வாயிலிருந்து உண்மையை வரவழைக்க முயன்றாள்.

பெருந்தேவி தன்னையும் மறந்து, "இவள் பிரசவித்து இரண்டு மூன்று நாட்கள்தான் ஆயின. குழந்தை........" என்று கூறிவந்தவள் அப்போதே தன் தவறையுணர்ந்து வாயை யடக்கிக்கொண்டாள்.

இதுதான் சமயமென்று லேடி டாக்டர், "குழந்தை என்னவாயிற்று? ..........." என்று வற்புறுத்திக் கேட்டாள்.

இச்சமயத்தில் ஒருவாறு உணர்வு பெற்றுக் கண்விழித்த தனபாக்கியம் தன் எதிரே தாயிருப்பதைக் கண்டதும் "அம்மா! யாரோ வந்தார்களே! அவர்கள் போய்விட்டார்களா?......." என்று அச்சத்தோடு கேட்டாள்.

பெருந்தேவி மகளது உண்மை நிலையை இன்னும் உணராதவளாய், "யார் வந்தது? இதோ

இருக்கின்றார்களே இவர்களா? ஹூம்; இவர்களைப் பற்றி என்ன?..........''என்று பதை பதைப்போடு கேட்டாள்.

லேடி டாக்டரும் நர்ஸுகளும் இன்னும் இருக்கிறார்களென அறிந்ததும், தனம் பய மேலீட்டால் முகத்தை மூடிக் கொண்டாள். பெருந்தேவி விஷய மறியாது திகைத்தாள். லேடி டாக்டரை வெறித்துப் பார்த்தாள்.

இச்சமயத்தில் வெளியேபோன நர்ஸு, போலீஸாருடன் உள்ளே நுழைந்தாள்: லேடி டாக்டர் தனபாக்கியத்தைக் குறிப்பிட்டுப் போலீஸாருக்குக் கண் சைகை காட்டினுள். உடனே போலீஸார் அப்போதும் கண்ணை மூடிக்கொண்டு தரையில் படுத்திருந்த தனபாக்கியத்தை மன்னர் பெயரால் கைது செய்தனர்.

அந்நியர் யாரோ தன்னைத் தொட்டுத் தூக்குவதை யறிந்து திடுக்கிட்டுக் கண்ணைத் திறந்த தனபாக்கியம், போலீஸார் தன்னைக் கைது செய்திருப்பதைக் கண்டதும், வாய்விட்டு அலறி அந்நிலையிலேயே மீண்டும் மூர்ச்சையானுள். இன்னமும் விஷயம்விளங்காத பெருந்தேவியோ போலீஸாரை வழி மறித்துத் தன் மகளைப் பற்றிக்கொண்டு, "ஏனையா என் மகளைப் பிடித்துக்கொண்டு போகிறீர்கள்? அவள் என்ன செய்தாள்? என்ன குற்றஞ் செய்தாள்?.........." என்று ஆவேசத்தோடு கேட்டாள்.

போலீஸாரில் ஒருவன், "அதென்னமோ அம்மா! எங்களை ஒன்றுங் கேட்காதீர்கள்.

மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் வந்து கேட்டுக்கொள் ளுங்கள்.......'' என்று கூறிவிட்டுத் தனபாக்கி யத்தைக் கடத்திக் கொண்டு செல்ல முயன்றான்.

பெருந்தேவி, தன் மகளை இறுகப் பற்றிக் கொண்டு, "என் மகளை விடமாட்டேன். வேண்டு மானால் அவளுக்குப் பதிலாக என்னை அழைத்துப் போங்கள்..............'' என்று பிடிவாதஞ்செய்தாள். லேடி டாக்டர், இவளுக்கு ஏதோ இத வார்த்தை கள் கூற முயன்றாள். அப்போதும் அவள் கைகால் சோர்ந்து தலை துவளக் கிடக்கும் தனபாக்கியத் தை விடவில்லை. எனவே, போலீஸார் பலாத்கார மாக அவளிடமிருந்து தனபாக்கியத்தைப் பிரித் துக்கொண்டு செல்லவேண்டியதாயிற்று. கடைசி யாகப் பெருந்தேவி "அட பாவிகளே! என் மகளை இப்புடி அநியாயஞ் செய்துகொண்டு செல்கிறீங் களே!உங்கத்தலைகளில் இடிவிழாதா?எங்கஏழைக் குடும்பத்தை இப்படி அலக்கழித்துப் பாழ் பண் ணுறீங்களே! உங்கக் குடும்பமும், குழந்தை குட் டிகளும் நன்றா யிருப்பார்களா? நீங்கள் நாசமாகப் போக!..............................தெய்வமே! உனக்குக் கூட கண்ணில்லையா? பெற்ற என் வயிறு பற்றி யெரியுதே?..............'' என்று கூறி வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு அலறி யழுதாள். இதற்குள் அக்கம் பக்கத்திலிருந்து ஜனங்கள் ஏராளமாகக் கூடிவிட்டனர். ஆனால் அடுத்த வீட் டுக் கிழவி மட்டும்அங்குத் தலை காட்டவில்லை. தான் போனால், இவள் தான் சொன்னாள் என்று நர்ஸு கள் பெருந்தேவியிடங் கூறித் தன்னைக் காட்டிக்

கொடுத்து விட்டால் என்ன செய்வது? அவள் தன்னை வைவாளே என்ற பயத்தால், அவள் தன் குடிசையிலேயே பதுங்கி யிருந்து பார்த்துக்கொண் டிருந்தாள்.

பெருந்தேவியின் பரிதாப நிலையைக் கண்டு லேடி டாக்டர் மனம் உருகி விட்டது. 'நாம் என்ன செய்வது? நம் கடமையைச் செய்தோம். அதற்கா கத் தானே நமக்குச் சர்க்கார் சம்பளங் கொடுக் கிறார்கள்' என்று அவள் எண்ணித் தன் மனதைத் தேற்றிக்கொண்டாள். போலீஸார், நர்ஸுகள் உதவியைக் கொண்டு தனபாக்கியத்தை வண்டியி லேற்றி விட்டு, லேடி டாக்டரை நோக்கினர். இக் குறிப்பறிந்த அவள், அவ்விடத்தை விட்டு மெல்ல நழுவி, வண்டியிருக்குமிடஞ் சென்று நர்ஸுகளு டன் அதில் ஏறிக் கொண்டாள். வண்டி செல்லத் தொடங்கியது. போலீஸார் அதன் முன்னும் பின் னுமாகத் தொடர்ந்து செல்ல லாயினர்.

இதுவரை தன் குடிசை வாயிற் புறத்திலிருந்து கதறிக்கொண்டிருந்த பெருந்தேவி, உன்மத்தங் கொண்டவள் போல், ஒரே தாவாக வண்டியை நோக்கித் தாவி யோடினாள். இதற்குள் பின்னே சென்ற போலீஸார், அவளைப் பிடித்துத் தடுத்து விட்டனர். அவள் போலீஸாரை மீறிக்கொண்டு ஓட முயன்றாள். போலீஸாரில் மூர்க்கத்தனமுள்ள ஒருவன் கோபங்கொண்டு பெருந்தேவியைப்பிடித் திழுத்துப் பின்னே தள்ளினான்; அவன் தள்ளிய வேகத்தில், வயது முதிர்ச்சியாலும் வறுமையாலும் உடல் தளர்ந்திருந்த பெருந்தேவி,நிலத்தில் விழுந்

தாள். போலீஸார் அவர்கள் போக்கில் சென்று கொண்டிருந்தனர். இதுவரை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த ஜனங்கள், ஒருவருக்கொருவர் வம்பளந்துகொண்டும், ஒவ்வொருவராகப் போய்க் கொண்டும் இருந்தனரே யொழிய, ஒருவராவது கீழே விழுந்து செயலற்றுக் கிடக்கும் பெருந்தேவிக்கு உதவி செய்ய முன்வரவில்லை.

## ஒன்பதாம் அதிகாரம்

பூந்தமல்லி ஹைரோட்டிலுள்ள ஒரு பெரிய பங்களாவுக்கு வெளியேயும் உள்ளேயும் ஏராளமான கார்கள் நிறைந்திருந்தன. வாயிலுக்கு வெளியே ஒரு சார்ஜெண்டும், சில கான்ஸ்டேபில்களும் நின்று, போக்கு வரத்துக்கு இடைஞ்சலேற்படாதவாறு கவனித்துக் கொண்டிருந்தனர்.

பங்களாவினுள்ளே மாளிகைக்குப் பின்புறத்திலுள்ள விசாலமான இடத்தில் ஒரு பெரிய தேநீர் விருந்து நடந்து கொண்டிருந்தது. கோமள விலாஸ் ஓட்டல் ஆட்களே பட்சணங்களைப் பரிமாறி விருந்தாளிகளை உபசரித்துக் கொண்டிருந்தனர். சென்னை சர்க்கார் மந்திரிகளும், உத்தியோகஸ்தர்களும், மற்றும் நகரப் பிரமுகர்களும், அங்குக் குழுமியிருந்து விருந்தில் கலந்துகொண்டனர். இத்தேநீர் விருந்து வைபவத்துக்குக் காரணமென்ன ? இவ்விருந்து அளிக்கப்படுதற்குரிய பிரதான புருஷர் யார் ? இவ் விருந்து அளிப்பவர் யார் ? திவான்பகதூர் கந்தசாமி முதலியாரே இவ் விருந்தின் பிரதான புருஷர். அவருக்குச் சமீபத்

தில் சர்க்காரால் சர் பட்டம் வழங்கப்பட்டதை முன்னிட்டே, இவ் விருந்து அவரது நெருங்கிய நண்பர்களில் ஒருவரான திவான்பகதூர் ஸ்ரீபதி நாராயணசாமி நாயுடுவால் அளிக்கப்படுகிறது.

எனவே, விருந்தினர்களில் நமது கதாநாயகன் அம்பலவாணனும், அவன் இளமனைவி தாமரைக் கண்ணியும் இருந்தனர் என்று கூறவேண்டுவது அனுவசியம். திவான்பகதூர் (இப்போது ஸர்) கந்தசாமி முதலியார் மகிழ்ச்சியே வடிவாய் அமர்ந்திருந்தார். அவர் நாசுக்காகப் பட்சணங்களில் ஒன்றை எடுத்து வாயில் வைப்பதும், தனக்கு மருமகனாக வாய்த்திருக்கும் அம்பலவாணனையும், சம்பந்தி தணிகாசல முதலியாரையும் மாறி மாறிப் பார்த்துப் பெருமிதங் கொள்வதுமாக இருந்தனர். தாமரைக்கண்ணி அங்கு வந்திருக்கும் மற்றப் பெண்மணிகளைக் காட்டிலும், நவ நாகரிகத்திலும் கல்வியிலும் மற்றும் பல வகைகளிலும் உயர்ந்தவள் என்ற எண்ணமுடையவளாய் அமர்த்தலாக அமர்ந்திருந்தாள். அவள் அடக்கமின்றித் தன் கணவனோடு சம்பந்தா சம்பந்தமின்றி ஏதேதோ கொஞ்சிக் கொஞ்சிப் பேசுவதும், பல்வரிசையைக் காட்டிச் சிரிப்பதுமா யிருந்தாள். ஏற்கெனவே, செல்வச் செருக்கி லாழ்ந்திருந்த அம்பலவாணன், இப்போது ஏற்பட்டுள்ள புது வாழ்வால் இன்னும் தலைதருக்கி யிருந்தான். அத்துடன் மாமனாரின் தீவிர முயற்சியால், சென்னைச் சர்க்கார் காரியாலயத்தில் ஒரு பெரிய உத்தியோகமுங் கிடைத்திருந்தது. அப்புறம் ஆசாமி நிமிர்ந்து நடப்பதற்குக் கேட்கவா வேண்டும்?

விருந்தினிடையே உற்சாகமாகப் பேச்சுக் கிளம்பியது. எதிர் வரிசையில் அமர்ந்திருந்த கமலநாதன் என்பவர், அம்பலவாணனை நோக்கி, "சமாச்சாரம் தெரியுமோ மிஸ்டர் அம்பலம்! உங்கள் ஊரிலே ஒருத்தி, திருட்டுப்பிள்ளை பெற்றுக் கழுத்தை முறித்துப் போட்டு விட்டாள் என்ற குற்றத்திற்காக, இங்கு செஷன்ஸ் கோர்ட்டுக்குக் கொண்டு வரப்பட்டுத் தீவாந்தர சிக்ஷை விதிக்கப்பட்டாளாமே!...." என்று சிரித்துக் கொண்டே கூறினர்.

தன் மனைவியோடு சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டிருந்த அம்பலவாணன், தூக்கத்தினின்றும் விழிப்புற்றவன்போல் துணுக்குற்று, நிமிர்ந்து "என்ன கமல்! எங்கள் ஊரில் என்ன நடந்ததாம்?..............." என்று கேட்டான்.

"யாரோ தனபாக்யம் என்று, படையாச்சி வகுப்பைச் சேர்ந்தவளாம். கலியாணம் ஆகாதவளாம். அதற்கு முன்பே எவனோடோ சம்பந்தங் கொண்டு..................."

தனபாக்யம் என்றதுமே அம்பலவாணன் முகம் மாறுபட்டது. எனினும் அவன் இடைமறித்து, "அதிருக்கட்டும். இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்? யார் சொன்னது?" என்று கேட்டான்.

"இதோ பார்! நேற்றைய பேப்பரில் வெளியாகி யிருக்கிறது" என்று தான் வைத்திருந்த 'ஹிந்து' பத்திரிகையை எடுத்துக் காட்டினன்.

அம்பலவாணன் அப் பத்திரிகையைப் பரபரப்போடு வாங்கினன். அதை வாங்கும்போதே அவ

னது கரம் நடுங்கியது. பத்திரிகையைப் புரட்டிப் பார்க்கையில், ஒரு பக்கத்தில் தனபாக்கியம் சிசு ஹத்தி செய்தாள் என்ற குற்றத்துக்காகத் தீவாந்தர சிக்ஷை விதிக்கப்பட்டாள் • என்ற விவரம் பெரிய எழுத்துக்களில் வெளியாகியிருந்தது. தனபாக்கியத்தின் வழக்கு, முதலில் தஞ்சாவூர் ஜில்லா ஜட்ஜ் முன் விசாரணை செய்யப்பட்டுக், கடைசியாகச் சென்னை செஷன்ஸ் கோர்ட்டுக்கு மாற்றப்பட்டதாதலால், இங்கு இவ்வழக்கு நடந்தது. தனபாக்கியத்தின் மீது தொடுக்கப்பட்ட சிசுஹத்தி வழக்கு, அநியாயமானது என்று வாசகர்களுக்குத் தெரிந்திருக்கும். அவளுக்கும், தெருவில் டிரங்கு பெட்டியில் வைத்து வீசப்பட்ட குழந்தைக்கும் சிறிதும் சம்பந்தமே இல்லை. அவள் பெற்ற குழந்தை இயற்கையா யிறந்ததால், தாயின் உதவியால் மண்ணில் புதைக்கப்பட்டு, மண்ணோடு மண்ணாய்ப் போய் விட்டது. எவளோ பெற்றுக் கழுத்தை முறித்தெறிந்த குற்றம் நிரபராதியான இவள் மீது சாட்டப்பட்டது. சந்தர்ப்ப சாட்சியங்களும் இவளுக்குப் பாதகமாகவே இருந்தன. ஆதலால், செஷன்ஸ் ஜட்ஜ் இவள் குற்றவாளி யெனத் தீர்மானித்து தீவாந்தர சிக்ஷை விதிக்கப்பட்டதில் ஆச்சரியமில்லை. இவ்விவரத்தை முற்றும் படித்ததும் அம்பலவாணன் அறிவு மயங்கியது. தலை சுழன்றது. 'தனபாக்கியம் தீவாந்தர சிக்ஷை பெற்றதற்கு நீயே மூலகாரணம்; உன்னாலல்லவா அவள் இவ்வித இழி காரியத்தைச் செய்து இக் கதியை யடைந்தாள்; உன்னாலல்லவா ஒரு

ஏழைப் பெண்ணின் வாழ்க்கை அநியாயமாகப் பாழ்பட்டது? என்று அவன் மனம் இடித்திடித்துக் கூறியது. சமாசாரத்தைக் கேட்டதாலும் படித்ததாலும் உண்டான அதிர்ச்சியும் இம் மனப் போராட்டத்தினால் ஏற்பட்ட உணர்ச்சியும் தாங்க மாட்டாமல் அம்பலவாணன் மயங்கி விழுந்தான். பக்கத்தில் அமர்ந்திருந்த தாமரைக் கண்ணி "ஆ"வென அலறி அவனைத் தாங்கிக் கொண்டாள். இதற்குள் மற்றவர்கள் உதவிக்கு வந்து விட்டார்கள். அம்பலவாணன் முகத்தில் நீர் தெளித்தார் ஒருவர். விசிறினார் மற்றொருவர். இருந்தாற்போலிருந்து அம்பலவாணன் மூர்ச்சை யடைந்ததற்குக் காரணமென்ன என அதிசயித்தனர் பலர். சமாசாரத்தைச் சொல்லிப் பத்திரிகையை அளித்த கமலநாதன், 'இச் செய்தியைப் படித்ததும் அம்பலவாணன் மூர்ச்சையாவானேன்? இதில் ஏதோ மர்மமிருக்கிறது' என்று கருதிப் பலவிதமாக ஊகஞ்செய்யலானான். ஸர் கந்தசாமி முதலியாரின் உற்சாகமெல்லாம் ஒரு நொடியில் போய்விட்டது. சிலருடைய யோசனை மீது அம்பலவாணன் உள்ளே தூக்கிச் செல்லப் பட்டுப் பஞ்சணையில் கிடத்தப்பட்டான். ஸர் பட்ட உபசாரக்கூட்டம் இவ்வித கோலாகலத்தில் அரைகுறையாக முடிந்தது. போஜனப் பிரியர்கள் இவ்வித 'அசமஞ்ச' நிலைமையினால் விருந்துக்கு விக்கினம் ஏற்பட்டதற்காக மனம் வருந்தி முணுமுணுத்தவாறு தத்தம் வீடு திரும்பினர்.

4

## பத்தாம் அதிகாரம்

காலை பத்து மணியிருக்கும். சென்னைப் பெனிடன்டரி சிறைச்சாலை. ஓர் அறையில் தனபாக்கியம் துயரமே வடிவாய் அமர்ந்திருந்தாள். சிறைச்சாலைக் காவலாளி திடீரென வந்து "அம்மா! உங்களை யாரோ ஒரு ஐயா பார்க்க வந்திருக்கிறார்" என்றான்.

"யார்? என்னையா ..........?" என்று வியப்பும் விசனமும் தோன்றக் கேட்டாள்.

இதற்குள் சிறைக் கதவு திறக்கப்பட்டது. அடுத்த கணம் அம்பலவாணன் உள்ளே வந்தான். அவன் முகம் வெளிறியிருந்தது. வந்ததுமே அவன் "தனம்!" என அழைத்த வண்ணம் அவளை நோக்கினான். அவளது அப்போதைய நிலையைக் கண்டதும் அவனுடைய மனம் அனலிலிட்ட மெழுகுபோல் உருகியது.

"யார், சின்ன எஜமானா?.......... நான் காண்பது என்ன கனவா? அல்லது நனவுதானா?.......... .........." என்று கேட்ட வண்ணம் எழுந்து நின்றாள் தனம்.

"ஆம்.................." என அவன் மெள்ளக் கூறினான்.

தனபாக்கியத்துக்கு அவனைக் கண்டதுமே ஆத்திரமும், கோபமும் பொங்கிக் கிளம்பியது. அவளுக்கு இன்னதுதான் பேசுகிறோம் எனத் தெரியவில்லை. படபடவெனப் பேசலானாள்.

"நீ ஏன் இங்கு வந்தாய்? எதற்காக வந்தாய்? என்னைக் குட்டிச் சுவராக்கியது போதாதா? இன்னும் என்ன செய்யவேண்டுமென்று எண்ணி இங்கு வந்தாய்? உங்கள் பணத்திமிரைக் காட்டுவதற்கு நான்தானா அகப்பட்டேன் ?..........போ வெளியே! உங்களை யார் இங்கே உள்ளே விட்டது? போ போ! என் கண்ணெதிரே நில்லாதே? என் வயிறு பற்றியெரிகிறது..............." இவ்விதம் கூறியதும், அவள் முகத்தில் கைகளை மூடிக்கொண்டு தேம்பித் தேம்பி யழலானாள். அம்பலவாணன் அப்படியே ஸ்தம்பித்துப்போய் நின்று விட்டான்.

சில விநாடிகள் கழிந்ததும் அம்பலவாணன் தன்னைச் சமாளித்துக்கொண்டு, தனபாக்கியத்தை நோக்கி, "தனம்!....தனம்!!....இப்படி என்னைப்பார்.......எதோ!......." என மெதுவாகக் கூப்பிட்டான்.

தனபாக்கியம் மெள்ள தலையைத் தூக்கினாள். அவளது கருத்த முகம் மிகுந்த கோபத்தினாலும் துக்கத்தினாலும் சிவந்திருந்தது. நீர் வற்றிய கண்கள் ஒளியிழந் திருந்தாலும், கூர்மையாக அம்பலவாணனைத் தாக்கின. "உன்னைப் பார்ப்பதா? உன்னைப் பார்த்துப்பார்த்துப்பேசிப்பேசிக் கெட்டது போதாதா? இன்னமுமா கெடவேண்டும்? என்னை இக்கதிக்கு ஆளாக்கியது போதாதென்று, இன்னமுங் கெடுக்க வந்திருக்கிறாய்? நான் உனக்கு என்ன தீங்கிழைத்தேன்? என்னை நீ இவ்விதம் படு குழியில் தள்ளிப் பரதவிக்கச் செய்வதற்கு.— ஆம்; ஆம். ஒரு விதத்தில் நான் உனக்

குத் தீங்கிழைத்தவள் தான். உன் தகுதியும் என்னுடைய அந்தஸ்தும் தெரியாமல் உங்கள் விருப்பத்துக்கு இசைந்ததும், சிநேகங் கொண்டதும் நான் செய்த பெரிய தவறல்லவா!—'விட புருஷர்களான ஆடவர்கள் பெண்களைப் பசப்புவார்த்தை பேசி மயக்கப் பார்ப்பார்கள். அதைக்கண்டு மகளிர் அறிவிழந்து மயங்கி விடக்கூடாது. வாலிபர்கள் நீறு பூத்தநெருப்புப்போன்றவர்கள்; ஆதலால் நெருப்பைக் கண்டால் எப்படி பயந்து ஒதுங்கிக் கொள்வோமோ அதுபோல, வாலிபர்களைக் கண்டாலும் ஓடி யொளிந்து கொள்ளவேண்டும்' என என்னம்மா அடிக்கடி பொதுவாகக்கூறுவது போல் சொல்லி என்னை எச்சரிப்பதுண்டு— அப்புத்தி மதியைக் கூட காற்றில் பறக்கவிட்டு, உன் பேச்சில் மயங்கி அறிவிழந்தேன். உன்னுடைய வார்த்தைகளையும், வாக்குறுதிகளையும் உண்மையென நம்பி என் உள்ளத்தை மட்டுமன்று உடலையும் உயிரையுங் கூட உனக்கே தத்தஞ் செய்தேன். நீ விரித்த வஞ்சக வலையில் வீழ்ந்து உணர்விழந்தேன். அதற்குத் தகுந்த தண்டனை யடைந்தேன். ஆ! அத் தண்டனையின் தன்மையையுங் கொடுமையையும் எண்ணிப் பார்க்கும்போது என் மனம் பதறுகிறதே!....'' என்று கூறி வந்தவள், ஆத்திரந் தாங்கமாட்டாமல் மேலே பேச முடியாது தத்தளித்தாள்.

தனத்தின் உணர்ச்சிமிக்க மொழிகளைக் கேட்டதும், அம்பலவாணன் மனம் உருகி விட்டது. அவனுக்கு என்ன சமாதானங் கூறுவதென்றே

தோன்றவில்லை. சிறிது நேரத்திற்குப் பிறகு அவன் மனவேதனை தாங்கமாட்டாது தலைகுனிந்திருக்கும் தனபாக்கியத்தை மெதுவாக நோக்கி, "தனம்! நான் இப்போது இங்கு எதற்காக வந்தேனென்றால்..........." என்று கூறி மேலே ஏதோ பேசத் தொடங்கினன்.

தனபாக்கியம் திடீரென நிமிர்ந்து, "எதற்காக இங்கே வந்தாய்? நான் இவ்விடத்தில் எப்படியிருக்கிறேன்; எவ்வித நிலையிலிருந்து தண்டனை யநுபவிக்கிறேன் என்று பார்த்துச் சந்தோஷமடைய வந்தாய் போலும்! ஏனென்றால் அந்தமானுக்கு அழைத்துப் போகப்பட்டுவிட்டால், அப்புறம் நான் சிறையில் அநுபவிக்கும் துன்பத்தை நீ கண்டு களிக்க முடியாதென்று எண்ணி அவசர அவசரமாய் ஓடி வந்தாயோ! நான் இருக்கும் நிலையைக் கண்குளிரப் பார்த்தாயிற்றோ இல்லையோ! மனம் சந்துஷ்டி யடைந்து விட்டதோ இல்லையோ!........ சரி; போய்வா! ஏன் நிற்கிறாய்? போ! போ!!........" என்று கூறிச் சீறி விழுந்தாள்.

அம்பலவாணன் அவளது ஆத்திரத்தைத் தணிக்கக் கருதி மீண்டும் சாவதானமாகவே, "தனம்! நான் கூறும் வார்த்தைகளைக் கேட்க மாட்டேனென்கிறாயே! நான் இங்கு எதற்காக வந்தேனென்றால், உன்னிடம் மன்னிப்புப் பெறவே........." என்று கூறிக்கொண்டு வருகையிலேயே தனம் வெகுண்டெழுந்து இடைமறித்துப் பேசத் தொடங்கி, "என்ன! என்ன!! மன்னிப்பதா? உன்னையா? நானா? எதற்காக?

ஏன் ?......ஹஹ்ஹஹ்ஹா ! மன்னிப்பு......மன்னிப்பு......ஹஹ்ஹா !......... மன்னிப்பு......ஹஹ்ஹஹ்ஹா ! ஹஹ்ஹஹ்ஹா !!.........ஹா ! என்று சொல்லிச் சிறைச்சாலைக் கட்டிடமே இடிந்து விழுமோ என நினைக்கும்படியாக உரக்கச் சிரிக்கலானாள். இக் கோபச் சிரிப்புச் சிரிக்கையில் அவளது தோற்றம் பார்ப்பதற்கே பயங்கரமாக இருந்தது. அவளுக்குத் திடீரென பைத்தியம் பிடித்து விட்டதோ என்றுகூட நினைக்கும்படியாக இருந்தது. அம்பலவாணனது தேகம் அவனை அறியாமலேயே நடுங்கியது.

தனபாக்கியம் மீண்டும் பேச வாரம்பித்தாள். "ஐயா ! என்னிடம் மன்னிப்புப் பெறவா வந்தாய்? நீ செய்த கொடுமைக்கு மன்னிப்புக் கூட உண்டோ ! கொலைபாதகஞ் செய்த உனக்கு—பஞ்சமா பாதகத்திலும் மேலான பெரும் பாதகத்தைப் புரிந்த உனக்கு—நம்பிக்கைத் துரோகஞ் செய்த உனக்கு—மன்னிப்பு என்பதும் உண்டா? நீ புரிந்த கொடுஞ்செயலைக் கடவுள் பொறுப்பானா? நீ நன்றாக வாழ்வாயா ? உனக்கு நல்ல கதி கிடைக்குமா ? ஒன்று மறியா பேதையாகிய எனக்கு-உலகானுபவமில்லாப் பட்டிக்காட்டுப் பெண்ணாகிய எனக்கு—ஆசைவார்த்தைக் காட்டி இனிக்க இனிக்கப் பேசி என் மதியை மயக்கினாய்; என் உள்ளத்தைக் கவர்ந்தாய்; கடைசியில் என் அருங் கற்பையுங் கொள்ளை கொண்டாய்; விலை மதிப்பில்லா இப் பொருளை என்னிடமிருந்து கவர்வதற்கு நீ என்னென்ன சாகஸஞ் செய்தாய் ?

என்னென்ன நயவஞ்சக வார்த்தைகள் பேசி ளுய்? என்னென்ன வாக்குறுதிகள் அளித்தாய்? அவ் வாக்குறுதிகள் என்னுயின? பெரிய இடத் துப் பெண்ணும் பெரும்பொருளும் வருகிறதென்ற வுடனே, உன் வாக்குறுதிகளை யெல்லாம் காற்றில் பறக்கவிட்டு வாயைப் பிளந்துகொண்டு ஓடினுய். உன் சம்பந்தத்தால் என் கதி என்னுகுமென்று சிறிதாயினும் எண்ணிப் பார்த்தாயா? அவ்வாறு கருதிப் பார்த்திருந்தால், என் முன்னே சில கரன்ஸி நோட்டுக்களைக் விட்டெறிந்து விட்டு ஒரு வார்த்தை கூட கூறுமல் வெளியேறி யிருப்பாயா? உன் போன்ற திமிர் பிடித்த பணக்கார வாலிபர் கள் என் போன்ற ஏழை மகளிருடைய கற்புக்கு அளிக்கும் விலை இதுதான் போலும். பரம ஏழை களென்ற காரணத்தால் வயிற்றுப் பிழைப்பைக் கருதி வேலைக்கு வரும் பெண்களை யெல்லாம் வேசி களென்று நீங்கள் கருதி விட்டீர்கள் போலும்! அடிமைப் பெண்ணுனவள் தன் உடலுழைப் பைத் தான் ஊதியங் கொடுக்கும் எஜமானுக்கு அடிமைப்படுத்துவாள்; உடம்பைக் கூடவா எஜ மானின் மிருக இச்சைக்கு அடிமைப்படுத்தக் கட் டுப்பட்டிருக்கிருள்? ஒருக்காலுமில்லை. ஆகவே, செல்வச் செருக்கிஞல் உண்டான உங்கள் காமக் களியாட்டத்துக்குக் கருவிகளாகவா ஏழை மகளி ராகிய நாங்கள் இருக்கிறோம்? இவ்விதம் மாசற்ற தான மகளிர் உலகத்தைத் தங்கள் தீயவொழுக் கத்தால் களங்கப்படுத்தி ஜனசமூகத்தைப் பாழ் படுத்திவரும் சாத்தான்களாகிய உன் போன்ற

வாலிபர்கள் ஒழியவேண்டும். அப்போதுதான் பெண்ணுலக மட்டுமல்ல; இவ்வுலகமே க்ஷேமப் படும். என் போன்ற ஏழைப் பெண்கள் வடிக்கும் கண்ணீர் உன் போன்ற விடபுருஷர் கூட்டத்தைக் கருவறுக்கும். நாங்கள் வயிறெறிந்து இடும் சாபம் உங்கள் பூண்டை நாசமாக்கும்........" என ஆத்திரங் கொண்டமட்டும் வைது வீர முழக்கஞ் செய்தாள்.

தனபாக்கியத்தின் ஆத்திரப் பேச்சைக் கேட்டு அம்பலவாணன் உண்மையிலேயே அச்ச மடைந்தான். அவள் கூறும் ஒவ்வொரு மொழியும் கூரிய அம்புபோல் அவனது உள்ளத்தைத் துளைத்து ஊடுருவிச் சென்றது. ஏற்கனவே, வேதனையடைந்திருக்கும் அவன் மனம் தனத்தின் சுடுசொற்களால் இன்னும் அதிக வேதனையை யடைந்தது. ஆயினும், தனம் எடுத்துக் காட்டும் ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் தான் உரியவனே என்பதை அவன் நன்குணர்ந்தான்; ஆதலால், அவளது வார்த்தை யெதையும் மறுத்துக் கூற அவன் துணியவில்லை. நண்பன் வாயிலாகச் செய்தியை யறிந்ததிலிருந்து அவன் தனபாக்கியத்துக்கு இழைத்த தவறை, மனம் அவனுக்கு இடித்து இடித்து உணர்த்தியது. தனம் நேருக்கு நேர் இவன் தனக்குப் புரிந்த கொடுமையை விவரித்துக் காட்டிப் பேசியதிலிருந்து அவன் தன் குற்றத்தின் தன்மையை நன்கு உணரலானான். எனவே, அவன் வீண் சாக்குப் போக்குக் காட்டிச் சமாதானம் கூற முடியவில்லை. மனதில் தைரி

யத்தை ஒருவாறு வரவழைத்துக்கொண்டு, தன பாக்கியத்தை நோக்கி, "அது இருக்கட்டும்; தனம்! நீ எப்படிச் சிறைக்கு வந்தாய்? என்ன குற்றத்திற்காகப் போலீஸார் உன்னைச் சிறைக்குக் கொண்டு வந்தார்கள்? எனக்கு விஷயமொன் றுமே புலனாகவில்லை; ஆதலால் தயவுசெய்து, அதுபற்றி விவரமாகக் கூறும்படி கேட்டுக்கொள் கிறேன்.—என்ன காரணம்! சொல்லமாட்டாயா?" என்று மிகவும் விநயமாகக் கேட்டான்.

"என்ன! நான் எதற்காகச் சிறைக்கு வந் தேன் என்று உனக்குத் தெரியாதா? உண்மை யாகவா? அல்லது என்னை மறுபடியும் ஏமாற்றும் நோக்கத்தோடு இவ்விதம் போலியாகக் கபட நாடகம் நடிக்கிறாயா? அப்படியானால், நான் இங்குச் சிறையில் இருப்பதுமட்டும் உனக்கு எப்ப டித் தெரியும்?........" என்று கேள்வி கேட்டு நிறுத்தினாள் தனபாக்கியம்.

அம்பலவாணன் அதற்கு ஏதோ சமாதானங் கூற வாயெடுத்தான். இதற்குள் தனபாக்கியம் மீண்டும் உத்வேகங்கொண்டவளாய், "நான் சிறையில் இருப்பது எதற்காக? என்ன காரணத் துக்காக? என்று சொல்லட்டுமா? உன்னால்தான் —புண்ணியவானை உன்னுடன் நான் கொண்ட தவறான சம்பந்தத்தால்தான்! நான் நீ கூறிய நயவஞ்சக வார்த்தைகளை யெல்லாம் உண்மை யென நம்பி, என் உள்ளன்பை—உள்ளத்தை— உடலை—உனக்கு உவந்தளித்தேன். நீ அதற்குப் பதிலாக என்ன அளித்தாய் தெரியுமா? நிரந்தரம்

பழியையும் பாவத்தையும் உண்டாக்கும் பாவமூட்டையைப் பரிசாக அளித்துவிட்டு ஓட்டம் பிடித்தாய்? நீ கொடுத்துச் சென்ற பாவ மூட்டைப் பரிசின் விளைவுதான் நான் தீவாந்தர சிக்ஷை பெற்றுச் சிறையிலிருப்பது! குந்தியைப் போலக் கன்னிப்பருவத்திலேயே பிள்ளைபெற்றது உற்றாருக்குத்தெரிந்தால், ஊராருக்குத் தெரிந்தால் பழியும் துன்பமும் ஏற்படுமே யென்று என் தாய் அதை மறைக்கப்போக, உலகம் முழுவதுமே அறியும்படியான இவ்விபரீத நிலைக்கு அது கொண்டுவந்துவிட்டது. கோர்ட்டில் என்மீது என்னென்னமோ குற்றஞ்சாட்டிக் குறை கூறினார்கள். விபசாரஞ் செய்து திருட்டுப் பிள்ளை பெற்றுத் தெருவில் போட்டுவிட்டேனாம். பிறருக்குத் தெரியக்கூடாதென்பதற்காக நான் குழந்தையின் கழுத்தை முறித்துக் கொன்று டிரங்கு பெட்டியில் வைத்து வீதியில் எறிந்து விட்டேனாம். இன்னும் என்னென்னமோ ஆபாசங்களெல்லாம்—என் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது போலிருந்தது; அவைகளை யெண்ணிப் பார்த்தாலும் நெஞ்சம் நடுங்குகிறது. ஆனால், பூமியில் அடக்கஞ் செய்யப்பட்ட குழந்தை பெட்டியில் எப்படி வந்தது என்ற இரகசியம்தான் இன்னும் எனக்குப் புலனாகவில்லை. என் தாயின்பிரார்த்தனைக்குக் கடவுள் இரங்கியோ என்னவோ, சிசு இயற்கை யாகவே இறந்து போய் விட்டதால் நாங்கள் சிசு ஹத்தி குற்றத்துக்கு ஆட்படவில்லை. ஆனாலும் சிசு ஹத்திக்குரிய தண்டனை மட்டும் என்னை விடவில்லை. அதுதான்

எனக்கு ஆச்சரியமா யிருக்கிறது. நான் எவ்வித மாகவோ இவ்விதச் சிறைவாசத் தண்டனை யடைய நேர்ந்ததைப் பற்றிச் சிறிதும் வருந்தவில்லை. என் தாயும் கஷ்டப்படுகிறாளே என்றுதான் மிகவும் வருந்துகிறேன். நீ வாலிபத் திமிரினால் காம வெறி கொண்டு குற்றம் புரிந்தாய்; ஆனால் அதற்குரிய தண்டனையை நான் அனுபவிக்கிறேன். இது என்ன நியாயம்? நமது சமூகநிலை அவ்வித மிருக்கிறது? ஆடவன் எவ்வளவு குற்றங்கள் வேண்டுமானாலும் புரியலாம்; குற்றஞ் செய்துவிட்டு வெளிக்குத் தெரியாது தப்பித்துக் கொள்ளலாம். விபசாரம் போன்ற பல குற்றங்களைப் பகிரங்கமாகச் செய்யச் சமூகம் ஆடவர்களுக்கு அநுமதியளிக்கிறது. ஆனால், பெண்களுக்கு அவ்வித அநுமதி கிடையாது. தப்பித் தவறி ஆடவர் வஞ்சக வலையில் சிக்கித் தவறி விட்டால் சமூகப்பழி, தண்டனை எல்லாம் பெண்கள் தலையில் விழுகின்றன. ஆடவர் புரியுங் குற்றத்துக்கு உடந்தையாக இருந்த காரணத்திற்காகப் பெண்கள் கடுந்தண்டனை யடைய நேருகிறது. இதுதான் இன்றைய உலகப் போக்கு. நீ செய்த குற்றத்திற்காக நான் தண்டனை யநுபவிப்பதுபோல், நான் அநுபவிக்கும் தண்டனைக்காக என் தாய் கஷ்டமும் துயரமும் அநுபவிக்க நேர்ந்திருக்கிறது. இது என்ன கொடுமை!— ஐயோ! என் அம்மா இப்போது என்ன நிலையி லிருக்கிறாளோ; எங்கு இருந்து தவிக்கிறாளோ! ஆதரிப்பாரின்றி அல்லலுறுகிறாளோ! நிர்க்கதியாய் நின்று துடி துடிக்கிறாளோ!

பட்டினியாய்க் கிடந்து பரதவிக்கிருளோ! என்னை நினைந்து நினைந்து ஏங்கி நைகிருளோ! என்னைப் பெற்றெடுத்ததற்கு இதுவா பலன்?........ஆ! ஆ!! அம்மா! என் அருமை அம்மா!........." என்று கூறியவண்ணம் சோர்வுற்றுச் சுவரின்மீது சாய்ந் தாள்.

இப் பரிதாபக் காட்சியைக் கண்டு அம்பலவா ணன் மனமுருகிப்போனன். அவனையறியாமலே அவன் கண்களிலிருந்து நீர் வெளிப்பட்டு ஆருகப் பெருகியது. இடையே இரும்புக் கதவு இவர்களைத் தடுத்திராவிடில், அம்பலவாணன் கட்டாயம் ஓடிப் போய்த் தனபாக்கியத்தைத் தூக்கியெடுத்து ஆஸ் வாஸப்படுத்தித் தேறுதல் கூறி யிருப்பான் என் பது திண்ணம். ஆகவே அவன் ஒன்றுந் தோன் ருது இரும்புக் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு தன பாக்கியத்தை நோக்கியவா றிருந்தான்.

சோர்வுற்ற நிலையிலிருந்த தனபாக்கியம் தன் னைச் சமாளித்துக்கொண்டு தனக்கெனப் போடப் பட்டிருந்த நார்க்கட்டிலின்மீது உட்காரப் போன வள், அப்போதும் அம்பலவாணன் அங்கு நின்றி ருப்பதைக் கண்டதும் என்ன நினைத்தாளோ என் னவோ! அவளுக்கு எங்கிருந்தோ மீண்டும் ஆத்தி ரம் மூண்டெழுந்தது. "இன்னும் நீ போகவில் லையா? சண்டாளா! துரோகி? இன்னும் என்னை எந்தப் படு குழியில் தள்ளக் காத்திருக்கிருய்? என் முகத்தில் விழிக்க உனக்கு வெட்கமாக இல்லையா? உனக்கு ரோஷமில்லையா? மானமில்லையா? நீயும் மனிதனு? என் தலைவிதியை நினைந்து அவதியுற்

றுக் கொண்டிருக்கும் என்னை ஏன் இவ்விதம் வந்து தொந்தரவு செய்கிறாய்? நீ இவ்விடத்தை விட்டுப் போகிறாயா? இல்லையா? அல்லது காவற்கா ரனைக் கூப்பிடட்டுமா?..............'' என்று தொண்டை கிழியக் கத்தினாள். அச்சமயம் அவள், இரத்தம் குடித்த பெண் புலிபோன்று காணப்பட் டாள். இரும்புக்கதவு பூட்டிடப்படாம லிருந்திருப் பின், அவளுக்கு அப்போதிருந்த கோபத்தில் அம் பலவாணன்மீது பாய்ந்து அவன் மார்பைப் பிளந்து குடலைப் பிடுங்கி மாலையாகப் போட்டிருப் பாள். அவ்வளவு ஆவேசமும் ஆத்திரமும் அவ ளுக்கு இருந்தது.

இக் கர்ண கடூரமான பேச்சைக் கேட்டதும், அம்பலவாணன் தான் ஆண்மகனென்பதையே மறந்து விதிர் விதிர்ப் படைந்தான். அந்நிலையில் அவன் அங்கு இருக்கவு மாட்டாமல் போகவு மாட்டாமல் நெருப்பின்மீது நிற்பவன்போல் தத் தளித்தான். இச்சமயத்தில் காவற்காரன் தனத் தின் கூச்சலைக் கேட்டோ என்னவோ அவ்விட மணுகி, மணியாய்விட்டது என்று அம்பலவாண னுக்குக் குறிப்பிட்டான். இதைக்கேட்டு உறக் கத்தினின்றும் விழித்தவன்போல் திடுக்கிட்டெ ழுந்து "சரி; போக வேண்டியதுதான்'' என மெள்ளக் கூறிக்கொண்டே, தனபாக்கியத்தைக் கடைக்கண்ணால் நோக்கியவாறே காவலாளியின் பின்னே சென்றான். கடைசி முறையாகத் தனத் தினிடம் ஏதோ கூறிவிட்டுப் போக வேண்டு மென்று அம்பலவாணன் கருதினானாலும், அவளை

நோக்கவோ பேசவோ அஞ்சினன். ஆதலால் அவன் அவ்விடத்தைவிட்டு வெளியே செல்லுகையில் அவளைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்றான். தனம், படுக்கையில் தொப் பென்று உட்கார்ந்த சப்தமும், அப்போதும் ஏதோ முணுமுணுக்கும் சப்தமும் அவன் காதில் ஒலித்தது.

## பதினோராவது அதிகாரம்

"மாமா! தனத்தை எப்படியாயினும் சிறையிலிருந்து விடுவிக்க நீங்கள் வழி செய்ய வேண்டும். நீங்கள் மனம் வைத்தால்தான் அது முடியும்" என்று அம்பலவாணன் தன் மாமனாரிடம் மன்றாடினன்.

ஸர். கந்தசாமி முதலியார் மருமகனை ஒருவிதமாக நோக்கியவாறு "அது எவ்வாறு அப்பா முடியும்? சிசுஹத்தி செய்தாள் என்று கண்டு போலீஸார் அவளை 'அரெஸ்டு' செய்திருக்கிறார்கள். கோர்ட்டில் விசாரணையும் நடந்திருக்கிறது. அவளைப் பரிக்ஷை செய்த லேடி டாக்டர் உட்பட சாட்சிகளெல்லாரும் இவள் குற்றவாளியே என நிரூபித்திருக்கிறார்கள். ஜூரிகளும் அதை ஆமோதித்திருக்கின்றனர். அதன்மீது ஜட்ஜ் இவள் குற்றவாளிதான் எனத் தீர்மானித்துத், தீர்ப்புக்கூறிய பிறகு தீவாந்தரசிக்ஷையும் அளித்திருக்கிறார். நீ சொல்வதைப் பார்த்தால், அவள் இவ்வாரத்திலோ அடுத்த வாரத்திலோ அந்தமானுக்கு அனுப்பப் பட்டு விடுவாள் என்று தெரிகிறது. இவ்வளவும் ஆனபிறகு இவளது தண்டனையை ரத்துசெய்து

விடுதலை செய்கிறதென்றால் ஆகிற காரியமா? இது கவர்னரால் கூட முடியாதே! நீ இவ்வளவு தூரம் சொல்வதற்காக வேண்டுமானால், தீர்ப்பு ஆன வுடனே யாயினும், அப்பீல் போட்டிருந்தால் பெரிய வக்கீலை வைத்து வழக்காடித் தண்டனையை ரத்து செய்ய முயன்றிருக்கலாம். இப்போது என்ன செய்வது?........" என்று கூறினார்.

அம்பலவாணன் மரியாதையாகவே, "மாமா! நான் சொல்வதை நம்புங்கள். அவள் குற்றமற்ற வள்; நிரபராதி. சிசுஹத்திக்கும் அவளுக்குஞ் சிறிதும் சம்பந்தமே கிடையாது. போலீஸார் அவள்மீது பொய்யாகக் கேஸை ஜோடனை செய் திருக்கிறார்கள் என்று நான் உறுதியாகக் கூறு வேன். சந்தர்ப்ப சாட்சியங்கள் அவள் தான் குற்ற வாளி யென நினைக்கும்படி செய்திருக்கின்றனவே யொழிய, உண்மையில் அபராதி யல்லவென்று நான் அவளை விசாரித்ததி லிருந்து தெரிகிறது. ஆதலால், நீங்கள் இவ் விஷயத்தில் சிறிது கவனஞ் செலுத்தி இவ் வேழைப்பெண்ணை விடுதலை செய் தால் உங்களுக்கு மிகுந்த புண்ணியமுண்டு. கவர்ன ரிடம் நீங்கள் உள்ள நிலைமையைச் சொல்லி இவ் வேழைப் பெண்மீது கருணை காட்டும்படி சிபார்சு செய்ய வேண்டும். சர்க்கார் நிர்வாக சபையில் முக்கிய மெம்பராகவுள்ள நீங்கள், கவர்னருக்குச் சொன்னால் அவர் கேட்காமலிருக்கமாட்டார். ஆத லால், நீங்கள் என் பொருட்டாக வாயினும் அவ சியம் இவ்விஷயத்தில் முனைந்து வேலை செய்ய

வேண்டும்" என்று மிக விநயமாக வேண்டிக் கொண்டான்.

ஸர். கந்தசாமி முதலியார் அம்பலவாணனை ஒருவிதமாக நோக்கிப் புன்னகை புரிந்தவராய், "ஆமாம், உனக்கு என்ன அப்பா அப் பெண் விஷயத்தில் அவ்வளவு அக்கரை? யாரோ வழியில் போகிற ஒரு பெண்ணுக்காக நீ இவ்வளவு பாடு படுவானேன்?:.................." என்று குத்தலாகக் கேட்டார்.

இக் கேள்வி அம்பலவாணனைச் சிறிது தயங்க வைத்தது. தான் உடனே பதிலளிக்காம லிருந் தால், அது விபரீதமான சந்தேகத்துக்கு இடங் கொடுக்குமென்று கருதிய அவன் தயக்கத்தை விட்டு, "ஒன்றுமில்லை; அவள் எங்கள் ஊர்ப் பெண், அதும்மட்டுமல்ல; எங்கள்வீட்டு வேலைக்கா ரியின் மகள்................" என்றான்.

"ஓகோ! அப்படியா?" எனக் கூறி ஸர். கந்தசாமி முதலியார் தலையை யாட்டினார்.

அம்பலவாணன் மீண்டும் பேச ஆரம்பித் தான். "இப்பெண்ணின் பரிதாபகரமான ஏழ்மை நிலைமையையும், திக்கற்ற தன்மையையும் அறிந் தால், நான் மட்டுமன்று; மாமா! நீங்கள்கூட அவ ளுக்கு உதவிபுரிய முன் வருவீர்கள். அவள் உண் மையிலேயே குற்றம் புரிந்தவளா யிருந்தால்கூட, அவளைத் தண்டனை யடைவதினின்றுங் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் இரக்க நெஞ்சமுள்ள உங்களுக்கு அவசியந் தோன்றும்.——பிறப்பி

லேயே பரம ஏழையாய்ப் பிறந்த இவள், சிறு பிராயத்திலேயே தந்தையை இழந்து விட்டாள். எனவே, விதவைத்தாயின் கஷ்ட ஜீவனத்தால் இவள் துன்பத்திலேயே வளர்ந்து வந்தாள். இவளுடைய அன்னைக்கும் வயதாகிவிட்டது. தன் ஒரே மகளான இவளையே பெரிதும் அவள் நம்பி இவளுக்காகவே உயிர் வாழ்ந்து வருகிறாள். இந்நிலையில் இப்பெண் இவ்வித அபாண்ட குற்றத்திற்காகத் தீவாந்தர சிட்சை யடைவதென்றால், இவளது எதிர்கால வாழ்க்கையே இருண்டு போகுமன்றோ! அதுமட்டுமல்ல; இவளது ஏழைத் தாயின் கதி அதோகதிதான். இப்போது அவளது பரிதாபகரமான கோர நிலையைக் கண்கொண்டு பார்க்க முடியாது..........'' என்று மூச்சு விடாது கூறிக்கொண்டே போனான்.

ஸர். கந்தசாமி முதலியார் ஆழ்ந்த யோசனையோடு ஒரு பெருமூச்சு விட்டு, ''ஊஹூம்; சரி; இதுபற்றி நான் கவனிக்கிறேன்; வேண்டியவற்றை உடனே செய்ய முயல்கிறேன்.—எதற்கும் நீ இந்தப் பெண் சிசுஹத்தி குற்றத்திற்கு உரியவளா? இல்லையா? என்பதை நிச்சயமாகத் தெரிந்துகொள். அவள் குற்றவாளி இல்லை என்பதற்கு ஏதேனும் ஆதாரங் கிடைக்குமானாலும் சேகரித்துப்பார்.—இவ் விஷயத்தில் நான் எவ்வளவு தூரம் செல்வாக்கை உபயோகப்படுத்த முடியுமோ அவ்வளவு தூரம் முயற்சித்துப் பார்க்கிறேன். பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாவுக்குப் புதிய அரசியலை வழங்கி யிருப்பதால், கூடிய சீக்கிரம் நம்

மாகாண அரசியலில் கூட மாறுதல் ஏற்படும் போலிருக்கிறது. காங்கிரஸ்காரர்கள்தான் அரசியலைக் கைப்பற்றுவார்கள் என்று வெகுவாகப் பிரஸ்தாபிக்கப்படுகிறது. அவர்கள் பதவியேற்றால், தனம் போன்றவர்களுக்குக் கூட விமோசன மேற்படலாம். அச் சந்தர்ப்பத்தை நாம் பயன் படுத்திக்கொண்டு நம் முயற்சியில் வெற்றி பெற லாம்" என்று தைரியங் கூறினர். அம்பலவாணன் முகத்தில் சிறிது தெளிவு ஏற்பட்டது.

## பன்னிரண்டாவது அதிகாரம்

எழும்பூர் ஸ்டேஷனிலிருந்து "திருவனந்த புரம் எக்ஸ்பிரஸ்" வெகு வேகமாய்ப் போய்க் கொண்டிருந்தது. இரண்டாவது வகுப்புக் கம் பார்ட்மெண்டு ஒன்றில் அம்பலவாணன் அமர்ந்தி ருந்தான். அவனது சுருங்கிய நெற்றியும் கவலை தோய்ந்த முகமும் ஆழ்ந்த சிந்தனையில் இருப்ப தைக் காட்டியது. அவனுடைய மனம் ரயிலின் வேகத்தைக் காட்டிலும் பல்லாயிரமடங்கு வேக மாகப் பிரயாணஞ் செய்து கொண்டிருந்தது. அவனது பூத உடல் அமைதியாக அமர்ந்திருந்த தேயொழிய, ஆன்மா மானத உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தது. அவன் மனம் கொலைக்குற்றம் புரிந்தவன் உள்ளம்போல் நடுநடுங்கிக் கொண் டிருந்தது. தான் இழைத்த கொடுமைக்குத் தக்க பரிகாரந் தேடாவிடின், தன் மனஞ் சாந்தியுறாது என்று அவன் கருதினன். ஆகவே, அவன் தான் தனபாக்கியத்துக்கு இழைத்த தீமைக்கு அவளைத் தண்டனையி னின்றும் எப்படியாயினும் விடுவித்து

விட வேண்டுவது தனது முக்கிய கடமையென்று உறுதிகொண்டான். இவ்வித மனப்போராட்டத்தோடேயே அவன் தஞ்சாவூர் ஸ்டேஷனையடைந்தான்.

அம்பலவாணன் ஷ்டேஷனைவிட்டு வெளியேறியதும், அங்கே காணப்பட்ட ஜட்கா வண்டிகளில் ஒன்றில் ஏறித் தன் மாளிகை நோக்கிச் செலுத்தும்படி கட்டளையிட்டான். ஜட்கா வண்டிக்காரன் குதிரையை வெகு வேகமாக ஓட்டலானான். அம்பலவாணன் அப்போதும் சிந்தனையிலேயே ஆழ்ந்து உட்கார்ந்து செல்லலானான்.

வண்டி ஊருக்குள் நுழையலாயிற்று. அச்சமயம் எதிர்பக்கத்திலிருந்து வந்த ஆரவாரத்தைக் கேட்டுத் திடுக்கிட்டு அம்பலவாணன் தலை நிமிர்ந்து நோக்கலானான். கிராமவாசிகள் கும்பலாகக் கூடி வந்து கொண்டிருந்தனர். அவர்களிடையேயிருந்து கூச்சலுஞ் சிரிப்பும் கிளம்பியவாறிருந்தது. விஷயமறியாது அம்பலவாணன், "அது என்ன ஜனக் கூட்டம்?..........." என்று ஆச்சரியத்தோடு வினவினான். இதற்குள் கூட்டம் வண்டியை அணுகியது. எனவே, வண்டிக்காரன் கூட்டத்தை விலகி ஓரமாகப் போகும்படிக் கூக்குரலிட்ட வண்ணம் குதிரையை ஒதுக்கி ஓட்டினான்; ஆகையால் உடனே அவனால் பதில் சொல்ல முடியவில்லை. கூட்டமும் வண்டியைக் கடந்து செல்லலாயிற்று. அம்பலவாணன் திரும்பி ஆவலோடு கூட்டத்தைக் கவனித்தான். கூட்டத்தின் நடுவே யாரோ ஒரு மாது கிழிந்த ஆடையை யுடுத்தியவண்ணம் தலைவிரி

கோலமாய்ப் போய்க் கொண்டிருந்தாள். அவள் வாயில் வந்தவாறு சம்பந்தா சம்பந்த மில்லாத வார்த்தைகளைக் கூறியவாறிருந்தாள். ஆனால் அவைகளை அம்பலவாணனால் அர்த்தஞ் செய்து கொள்ள முடியவில்லை. கூட்டத்தில் கலந்தி ருந்த சிறுவர்கள் அவள் மீது கற்களையும் மண்ணாங் கட்டிகளையும் வாரி யெறிந்து விளையாடலாயினர். பெரியவர்கள் இதைக் கண்டு கைகொட்டிச் சிரிக்க லாயினர். இதிலிருந்து அவள் யாரோ பைத்தியக் காரி என்று அம்பலவாணன் கருதினான். அவளுக் குச் சிறுவர்கள் செய்யும் துன்பத்தைக் கண்டு அவன் மனம் பதைத்தது. அவளது நிலைமைக்காக அவன் வருந்தலானான். அவனை யறியாமலே, 'பாவம்!' என்று அவன் வாய் மொழிந்தது. அதே சமயத்தில் வண்டிக்காரன் பேசத் தொடங்கி, "சாமி! பாத்திங்களா இந்தக் கோரத்தை? பாவம்.—பசுபோலிருந்த இந்தப் புண்ணியவதி பைத்தியமாயிட்டுது. இந்தப் பைத்தியம் யாருன்னு உங்களுக்குத் தெரியுதுங்களா?- (அம்பலவாணனை ஒருவிதமாக நோக்கி) ஏன் சாமி! உங்களுக்கு இந்த ஊருதானுங்களே! இல்லாட்டா வெளியூரி லேருந்து இப்போதான் இந்த ஊருக்கு வர்ரீங் களா?—நீங்க இங்கே யாரு வூட்டுக்குப் போவ னும்னு சொன்னீங்க—நான் அதை இதுக்குள்ளே மறந்துட்டேனே!.........." என்று நீட்டிப் பேசிக் கொண்டே போனான்.

அம்பலவாணன் இடைமறித்து, "அதிருக் கட்டும் அப்பா! நீ அந்தப் பைத்தியக்காரியைப்

பற்றிச் சொல்ல ஆரம்பித்தாயே? அதைக் கூறு. அவள் யார்?..............'' எனப் பக்குவமாகக் கேட்டான். தன்னைத் தெரிந்துகொள்ளாத அவ்வண்டிக்காரனிடம் தான் இன்னான் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்பவில்லை.

வண்டிக்காரன் மீண்டும் பேசத் தொடங்கி, "அந்தப் பைத்தியக்காரி யாருன்னு தானே கேக்கிறீங்க. அந்தம்மா படையாச்சி பொம்புளையானாலும் மகா உத்தமிங்க. இந்த ஊரு பண்ணையார் வூட்டிலே இவள் வேலை செய்து ஜீவனம் நடத்திவந்தா. இவ புருஷங்கூட பண்ணையா ரிடத்திலே தான் வேலை செய்து வந்தானும். அவன் செத்துப்புடவே இவளும் இவ பொண்ணும் அவங்க ஆதரவிலே இருந்து வேலை சேஞ்சு வராங்களாம்..........'' என்றான்.

வண்டிக்காரன் கூறிவரும் போக்கிலிருந்து தான் பார்த்த பைத்தியக்காரி பெருந்தேவியாகத் தான் இருக்குமென உணர்ந்த அம்பலவாணன் திடுக்கிட்டுப் போனான். அவனால் எதிர்பாராது ஏற்பட்ட மன அதிர்ச்சியைத் தாங்க முடியவில்லை. "யாரு? இவள் பெருந்தேவியா........?'' என்று அவன் தன்னை மறந்து கேட்டான்.

வண்டிக்காரன் வியப்போடு அம்பலவாணனைத் திரும்பிப் பார்த்து, "ஆமாங்க. அதுதான்னு சொல்றாங்க........அப்படின்னா உங்களுக்கு இவங்களைப்பத்தி தெரியும்போலிருக்கே......................''
என்றான்.

அம்பலவாணன் தன் பதட்டத்தை அப்போது தான் உணர்ந்தான். ஊரில் தனபாக்கியத்தின்

வழக்கைப் பற்றி என்ன பேசிக்கொள்ளுகிறார் கள்; அவற்றிலிருந்து உண்மை ஏதேனும் வெளிப்படுமா? அது தனபாக்கியத்தை விடுதலை செய்வதற்கு உதவியா யிருக்குமா? என்று உள்ள நிலைமையை உளவறியவே, அவன் தன் வருகை யைப் பற்றித் தாய் முதலியவர்களுக்குக் கூடத் தகவல் கொடுக்காது திடீரெனப் புறப்பட்டு வந்தா னுதலால், வண்டிக்காரன் வாயிலிருந்து என்ன கிடைக்கிறது என்று தெரிந்து கொள்ள ஆவல் கொண்டு, "ஊஹூம்; எனக்கு இந்த ஊரே புதுசு அப்பா! பண்ணையார் வீட்டார் எங்களுக்கு வேண் டியவர்களாதலால், அவர்கள் வீட்டில் இருப்பவர் களைப்பற்றி யெல்லாங் கேள்விப்பட்டிருக்கிறேன். அவ்வளவுதான்........நீ என்னமோ இவளைப்பற்றிச் சொல்லி வந்தாயே! அப்புறம் என்ன அப்பா! ........" என்று சாதுரியமாகப் பேசினான்.

வண்டிக்காரன் அம்பலவாணனை ஒருவித மாகப் பார்த்து, "ஓ, அப்படிங்களா!........... இப்ப சொன்னிங்களே பேரு பெருந்தேவின்னு; அந்தம் மாளுக்கு ஒரு பொண்ணு இருக்குன்னு சொன்னே னுங்களா? அந்தப் பாழும் பொண்ணுலேதாங்க இந்தம்மா இந்தக் கதியடைந்து பைத்தியம் பிடிச் சுத் திரியறாங்க. அந்தப் பொண்ணு பேரு தனங் களாம். எப்போ பார்த்தாலும் இந்தப் பைத்தியம், "தனம்! தனம்!! என்னை வுட்டு எங்கே பூட்டேடி. யாருடி உன்னைப் புடிச்சிப் பூட்டா! அடி தனம்! தனம்!!"ன்னு பினாத்திக்கினு இருக்குதுங்க. இந்தப் பரிதாபத்தைப் பார்க்க சகிக்கிலிங்க........

..........பாவம்! அந்தப் பொண்ணுதான் என்ன செய்யுங்க? அநியாயமா அந்தப் பொண்ணுமேலே போலீஸுக்காரங்க குற்றஞ் சுமத்திக் கொண்டு பூட்டானுங்க. இந்தப் படவாங்களே இப்படித் தான் அக்கிரமஞ் செய்யருனுங்க. ஏழைங்க தலை மேலெதான் அவன்க கை வைக்கிருனுங்க. 'பழி ஓரிடம்; பண்டமோரிடம்' என்று பழமொழி சொல்லுவாங்களே; அதுமாதிரி எவளோ கொழுத் துப்போயித் திருட்டுப்புள்ளைப் பெத்துத்தெருவுலே போட்டுட்டா, அதை இந்த ஏழைப் பொண்ணு தலையிலா சுமத்தனும்? என்ன அக்கிரமங்க. இதுக்கு யாரோ ஒரு லேடி டாக்டரம்மா சாட்சி யாம். இங்கிலீஷ்காரன் ஆளற ராஜ்யத்திலே கேள்வி முறை யில்லைங்களா? ஊரும் ஒன்னு மில் லாதவங்க மேலேதானே வம்பளக்குதுங்க. பணக் கார மூட்டுச் சமாச்சார மின்னு வாயைத் திறக் கறதே யில்லிங்க. இதுவாங்க நியாயம்? எனக்குக் கூட நடந்த சமாச்சாரம் தெரியாதுன்னு, நானும் இந்தப் பொண்ணு மேலேதான் சந்தேகப்படு வேனுங்க.........." என்று அநுதாபத்தோடு பேசினுன்.

"அப்படி யென்றுல், குழந்தையைப் பெற்றுத் தெருவிலே கொன்று போட்டது இந்தப் பெண் ணில்லையா?.........." என்று பதைபதைப்போடு கேட்டான் அம்பலவாணன்.

வண்டிக்காரன், "இல்லைங்க. அது வேறே ஆசாமிங்க. ஒரு பணக்கார முண்டச்சித் திண்ணுக் கொழுத்துப்போய் திருட்டுப் பிள்ளை பெற்றுப்

பண்ணையாளிடங் கொடுக்கப்போக, அது இப்படி யெல்லாம் வந்து சந்திச் சிரிக்குதுங்க..................'' என்றான்.

“யாரப்பா அந்த அமங்கலி? எங்கே யிருக்கிறது? இந்த ஊரா?.........'' என்று ஆவலோடு கேட்டான்.

“பேரே சொன்னாலும் ஊரைச் சொல்லலாங்களா? அது பெரிய இடத்துச் சமாச்சாரங்க. இந்த ஏழைக்கு ஏங்க பெரிய மனுஷாப் பொல்லாப்பு?......நான் தெரியாதே வா தவறி உளறிட்டேங்க.........நீங்க அதைப் பரவா பண்ணாதீங்க... ....ஆமாங்க நீங்க யாரு வூட்டுக்குப் போவனுமிங்க ?.......'' என்று கூறிப் பேச்சை மாற்ற முயன்றான்.

அம்பலவாணன் “சும்மா சொல்லப்பா! நான் என்ன யாரிடத்திலாயினும் சொல்லப் போகிறேனா? நான் இந்த ஊரைச் சுற்றிப் பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்தேன்.—அந்த விதவையம்மா யார்? அவர்கள் பெற்ற பிள்ளையை எப்படி இந்த வேலைக்காரி பெற்றது என்று போலீஸார் குற்றஞ் சாட்டினார்கள்? அது முடியாதே அப்பா! எப்படிச் சொல்லு பார்க்கலாம்.......'' என்று நயமாகப் பேசி அவன் கையில் ஒரு வெள்ளி ரூபாயை வைத்தான்.

வெள்ளையப்பனைப் பார்த்ததும், வண்டிக்காரனது முப்பத்திரண்டு பற்களும் வெளியே தெரிய ஆரம்பித்தன. அவன் நன்றியறிதலுள்ள நாய்க்

குட்டி வாலைக் குழைப்பதுபோல், மிகக் குழைவாகப் பேசத் தொடங்கி, “ இல்லைங்க. நாம்ப ஊருக்குள்ளே நுழைந்தா மேலண்டை வாடையிலே ஒரு வூடு ஒசரமா இருக்கிறது தெரியுங்க. அதுக்கு மேட்டுக் குடி வூடு இன்னு பேருங்க. அந்த வூட்டு எஜமான் இறந்துபோய் ரொம்ப நாளாயிடுதுங்க. இப்பொ அவரு பொஞ்சாதிதான் வீடு - கீடு, நிலம் புலம், சொத்துச் சுதந்தரம் எல்லாத்தையும் பாத்துக்கிறாங்க. அந்தம்மா ரொம்ப நல்லவங்கத்தான். மகாபதிவிரதைதான். என்னமோ இவ்வளவுநாளா இல்லாதே இப்போதுதான் புத்தி பிசகிப் போயி, அவங்கப் பண்ணையிலே வேலை செய்யற மருதெ என்ற ஒரு பள்ளப் பயலோடே தவறான வழியில் சம்பந்தம் வைச்சிக்கிட்டாங்கபோலிருக்கு. அதன் பலன் கைமேலே கிடைச்சிடுதுங்க. அதெ ஊரார் அறியாமல் மறைக்க வெகுபாடு பட்டாங்களாம். என்னென்னமோ மருந்து மாயமெல்லாம் சாப்பிட்டுப் பாத்தும் கலைக்க முடியலையாம். எங்கெ சொந்த மனுஷா கண்டுடப் போராங்களோன்னு, வெளியே தலை காட்டாமலே இருந்தாங்களாம். விசாரிக்கிறவங்களுக்கு நோவு நொடின்னு சாக்குச் சொல்லி வந்தாங்களாம். பத்து மாசத்தையும் பயத்தோடே கழிச்சிக் கடைசியாப் பிள்ளையைப் பெத்தாங்களாம். அதை அந்தப்பள்ளப்பயலிடமே கொடுத்து யாருக்குந் தெரியாமே கொன்று புதைச்சுட்டு வரும்படி ஏற்பாடு செய்தாங்களாம். தான் புள்ளை பெத்ததும், அதைக் கொன்னுட்டதும் வெளியாவாமே இருக்கிறதுக்காகச் சேணை தூரம்

பாடுபட்டாங்களாம். மருத்துவச்சிக்கும் மற்றவங் களுக்கும் பணத்தெ தண்ணீரா வாரி யிறைச் சாங்களாம். இவ்வள செய்தும் அந்த குடிகாரப் படுவாவாலே எல்லாக் குட்டும் வெளியாயிடுச்சி.— என்னேக்கு மருதெ சிசுவின் கழுத்தே முறிச்சி எடுத்துக்கிட்டு வந்தானே, அன்னெ இராத்திரி நான் ரயில் ஸ்டேஷனிலிருந்து சவாரி யில்லாதெ வெறும் வண்டிய ஓட்டி வந்துக்கினுருந்தேனுங்க. யாரோ அந்தக்கும்பிருட்டிலே தெம்மாங்குபாட்டுப் பாடின்னு, தள்ளாடித்தள்ளாடி வந்திக்கினு இருந் ததைப்பார்த்தேனுங்க. யாரோ குடிச்சுவெறிச்சுக் கூத்தாடிக்கிட்டுப் போறான்னு நினேச்சு என் பாட் டுக்கு வண்டியே ஓட்டிக்கினு போனேனுங்க. இதுக்குள்ள தடாலுன்னு சப்தங் கேக்கவே திடுக் கிட்டுப் போனேனுங்க. அப்புறம் பார்த்தா அந்த மனுஷன் கீழே விழுந்து கிடந்தது தெரிஞ்சுச்சு. ஒடனே நான் வண்டியெ விட்டுக் குதிச்சு அவனே தூக்கப் போனேனுங்க. அப்போதா அவன் மருதென்னு எனக்குத் தெரிஞ்சுது. அப்பக்கூட அவன் வாயிலே வந்தபடில்லாம் என்னென்னமோ பிஞத்திக்கினு இருந்தானுங்க. அதெ காது குடுத்து கேட்க முடியலிங்க. அவ்வளவு ஆபாசமான சமாச் சாரமெல்லாம் சொன்னனுங்க. பின்னலே பாத்தா அவன் கையிலே ஒரு தகரப்பொட்டி வைச்சிருந் தது தெரிந்தது. என்னமோ எடுத்துக்கினு போ ருன்னு நினேச்சேனுங்க. அவனேத் தூக்கிவுட்டு அனுப்பிட்டு நான் வண்டியெ ஓட்டிக்கிட்டுப் போனெனுங்க. விடிஞ்ச பிற்பாடு சமாச்சாரத்தெ

கேக்கப்போறு விஷயம் எனக்கு விளங்கிடுதுங்க. அப்பொதான் முதறு இராத்திரி மருதெ உளறி னது அர்த்தமா யிடுத்து......." என்று கூறிக் கொண்டு வரும்போதே, வண்டி பண்ணையார் வீட்டு வாசலண்டை வந்து நின்றது. எனவே, வண்டிக் காரன் பேச்சை நிறுத்தவேண்டியதாயிற்று. அம் பலவாணன் அதற்குமேல் அவன் கூறுவதைக் கேட்க விரும்பவில்லை. முக்கியமாகத் தெரியவேண் டிய விஷயம் கிரகித்தாய் விட்டது; இனி, மேலும் அவனைக் கூறச் சொல்லிக்கேட்டால் வீண் சந்தே கத்துக் கிடமாகும் எனக் கருதி அம்பலவாணன் வண்டிக்காரனுக்கு அவன் கேட்டதற்கு அதிக மாகவே கூலியைக் கொடுத்து அனுப்பினுன். வண் டிக்காரனுக்குச் சந்தோஷம் தலைகால் தெரிய வில்லை. அன்று அவன் நரி முகத்தில் விழித்ததாக எண்ணினுன். எனவே அவன் அம்பலவாணனை வாயார வாழ்த்திப் பலமுறை கூழைக் கும்பிடு போட்டுவிட்டு வண்டியை ஓட்டிச் சென்றுன்.

## பதின்மூன்ருவது அதிகாரம்

அம்பலவாணன் திடீரென வந்ததைக் கண்டு சுந்தரத் தண்ணியும், சிவகாமியும் ஆச்சரிய மடைந்தனர். "என்ன தம்பி! எங்களுக்கு ஒரு தகவலுங் கொடுக்காமலே திடீரென வந்தாயே! என்ன விசேஷம்? அவள் கூட வரவில்லையா? நீ மட்டுந் தனியாக வந்திருக்கிருயே!—ஒரு கடுதாசி போட்டால், நீ வருகிற நேரத்துக்கு வண்டியை அனுப்ப மாட்டோமா?......." என்று கேட்ட

வாறே தன் பிள்ளையை வரவேற்றார் சுந்தரத் தண்ணியம்மாள்,

"ஒன்றும் விசேஷமில்லை. ஒரு அவசர காரியமாகத் திருச்சினப்பள்ளி போகவேண்டியிருந்தது. போய் வருகிற வழியில், இப்படியே வந்தேன். அவ்வளவுதான்..........ஆமாம்....நம்ம ஊரில் ஏதாயினும் விசேஷமுண்டா?..........." என்று ஒன்று மறியாதவன் போல் அம்பலவாணன் கேட்டான்.

இவ்விதம் கேட்டதுதான் தாமதம். தாயும் மகளுமாகச் சேர்ந்து, தனபாக்கியத்தைப் பற்றியும், பெருந் தேவியைப் பற்றியும் வண்டி வண்டியாகக் கதை சொல்லத் தொடங்கி, பரம்பரைப் பணக் கிறுக்கினல் அவர்களைப் பற்றி இல்லாததும் பொல்லாததும் இழிவாகக் கூறி ஏளனஞ் செய்தனர். அத்துடன், மேட்டுக்குடி வீட்டு மங்களத் தாய்ச்சி யம்மாள் சமாச்சாரத்தையும் விஸ்தாரமாகக் கூறிப் புரளி செய்யலாயினர்.

தன் அன்னை, சகோதரி ஆகியோருடைய பெருமித மனோபாவத்தையும், பிறரை இழித்துக் கூறும் இயல்பையுங் கண்டு அம்பலவாணன் அருவருப் படைந்தான். ஆனல் அவர்கள் கூறிய விஷயத்திலிருந்து, மங்களத்தாய்ச்சியம்மாளுக்கு அந்தரங்கக் காரியதரிசிபோல, அம்புஜம் என்ற சமையற்காரி இருந்து வருகிறாளென்றும், அவளுக்கு எல்லா விஷயங்களும் நன்ருகத் தெரியுமென்றும் தகவல் கிடைத்தது. எனவே, அவன் எப்படியாயினும் அம்புஜத்தைப் பிடித்தால் உண்மையை எளிதாக நிரூபித்து, தனபாக்கியத்தை விடுதலை

செய்யமுடியும் என்று தீர்மானித்தான். ஆயினும், அவன் தன் மன நிலைமையையும், தான் வந்த நோக்கத்தையும் மறந்தும்கூட தாய் முதலியவர்களுக்குத் தெரிவித்து விடக் கூடாது என்று ஜாக்கிரதையாக இருந்து வந்தான்.

அன்று பகல் கழிவதற்குள் அம்பலவாணன் தன் ஊரை ஒரு சுற்றுச் சுற்றி வந்து விட்டான். தன் பண்ணையாட்களிடமும், மற்றவர்களிடமும் லோகாபிராமமாகப் பேசுவதுபோல் பேசி விஷயங்களைக் கிரகித்துவந்தான். கிடைத்த தகவல்களிலிருந்து, ஆரம்பத்தில் தனபாக்கியம்தான் திருட்டுப் பிள்ளை பெற்று கழுத்தை முறித்துப் போட்டுவிட்டாள் என்று நினைத்துத் தூஷித்தவர்களெல்லாம், இப்போது, எப்படியோ வெளியாய் விட்ட மேட்டுக்குடி வீட்டுச் சமாச்சாரத்தை யறிந்த பிறகு, தனம் அநியாயமாகத் தண்டனையானதைப் பற்றி அநுதாபப் படுவதாகவும், மேலும் பெருந்தேவிக்குப் பெண் பாசத்தால் பைத்தியம் பிடித்துப் போய்விடவே, இன்னும் அநுதாபம் அதிகரித்திருப்பதாகவும், மங்களத் தாய்ச்சியை இழித்துக் கூறுதவர்கள் ஊரிலில்லை யென்றும், உறவினர்கள்கூட அவள் வீட்டுக்குப் போவதை நிறுத்தி விட்டார்களென்றும், இதனுல் மங்களத்தாய்ச்சி வெளியே தலை காட்ட முடியாது வேதனைப்பட்டு வருகிருளென்றும், குள்ளநரி தந்திரம் வாய்ந்த அம்புஜம் எல்லாக் காரியங்களையுங் கவனித்து வருகிருளென்றும், ஊராரும் உறவினரும் மங்களத் தாய்ச்சியை சமூக பகிஷ்காரஞ் செய்ய உத்தேசித்

திருப்பதாகவும், இரகசியம்வெளியானதும் மருதை பயந்துபோய் ஊரைவிட்டே ஓடி விட்டானென்றும் விஷயங்கள் வெளியாயின.

இவ்விஷயங்களெல்லாம் சேர்ந்து அம்பலவாணன் மனதைப் பலவிதமாக அலக்கழித்தன. மங்களத்தாய்ச்சியம்மாள் நிலைமைக்காக அவன் மனமிரங்கினன். ஆயினும், இவ்வுண்மையைக் கொண்டுதானே தனபாக்கியத்தை விடுவிக்க முடியும் என்று எண்ணியபோது அவள்மீதில் அநுதாபங் காட்டுவதில் பயனில்லை என்று உணர்ந்தான். இரவெல்லாம் இதே சிந்தனையோடு அவன் உறங்கிப்போனன்.

மறுநாள் பொழுது விடிந்தது. அம்பலவாணனும் உறக்கத்தை விட்டெழுந்து காலைக்கடனை முடிக்க வெளியே வந்தான். அச்சமயம் அவன் தாயிடம் பண்ணையாளொருவன் ஏதோ பரபரப்போடு கூறிக் கொண்டிருந்தான். சுந்தரத்தண்ணியம்மாள் தன் மகனைக் கண்டதும், " தம்பி! சமாச்சாரத்தைக் கேட்டாயா? மங்களத்தாய்ச்சி இராத்திரி கிணற்றில் விழுந்து விட்டாளாமே. பிரேதம் நீரில் மிதந்துகொண் டிருக்கிறதாம். தலையாரி முனிசிப்புக்குத் தகவல் சொல்லப் போயிருக்கிறும்.............. " என்று நீட்டிக் கூறிக்கொண்டே போனுள்.

இச் செய்தி அம்பலவாணனைத் தூக்கி வாரிப் போட்டது. ஒரு கணம் ஏதோ நினைத்தான். அடுத்த விநாடி உன்மத்தம் பிடித்தவன்போல், மேட்டுக்குடி வீட்டை நோக்கி ஓடலானுன். மங்களத்

தாய்ச்சி கிணற்றில் விழுந்திறந்தது ஊரில் காட்டுத் தீப்போலப் பரவிவிட்டது. ஆகவே, மேட்டுக்குடி வீட்டுப் புறக்கடையில் ஜனங்கள் திரண்டு விட்டனர். கூட்டங் கூடினல் வம்பளப்புக்குக் கேட்கவா வேண்டும்? அவரவர்கள் தத்தமக்குத் தோன்றிய விதமெல்லாம் பேசத் தொடங்கினர். இன்னவர்களிடையே அம்பலவாணனுங் காணப்பட்டான். அவன் கிணற்றைக் குனிந்து கூர்மையாகக் கவனித்துவிட்டுப், பிறகு நாலாப்பக்கமும் பரபரப்பாகப் பார்க்கலானன்.

வீட்டின் உட்புறத்திலிருந்து அழுகை யொலி இவன் காதில் விழுந்தது. எனவே, இவன் மெதுவாக உள்ளே நுழைந்தான். அங்கே முன் புறத்தில் அம்புஜம் கைகளை முறித்துக் கொண்டு கதறியழுது கொண்டிருந்தாள். சிறிது தூரத்தில் மங்களத் தாய்ச்சிக்கு நெருங்கிய உறவினர்களான சில பெண்கள் மூக்கைச் சிந்திப் போட்ட வண்ணமிருந்தனர்.

அம்பலவாணனைக் கண்டதும் அம்புஜம் விதிர்ப்புற்றாள். பிறகு தன்னைச் சமாளித்துக் கொண்டு, பெரிய இடத்துப் பிள்ளை என்ற மதிப்போடு, "பண்ணை எஜமான்! என்ன அநியாயமென்கிறது! நேற்று இராத்திரி கூட படுக்கப் போகுமுன் என்னண்டை நன்றாய்ப் பேசிட்டுப் போனுங்களே! இந்த மாதிரி மோசஞ் செய்வாங்கன்னு தெரியாமெ போச்சே!......" என்று ராகம் போட்டு அழுதாள்.

அம்பலவாணன் அவளுக்குத் தகுந்தபடியே பேச ஆரம்பித்து மெள்ள அவளைத் தனியே அழைத்துக்கொண்டு உள்ளே போனான். மங்களத் தாய்ச்சி தற்கொலை பண்ணிக் கொண்டதற்குக் காரணம் என்னவாயிருக்குமென்று அவன் ஒன்றுந் தெரியாதவன்போல் கேட்டான்.

"அந்த அக்கிரமத்தை ஏன் கேக்கறிங்க. ஊரிலே இருப்பவங்க பொறாமைப் பொச்சரிப்பிலே இந்த அம்மாமேலே அபாண்டமா ஒரு பழியெச் சுமத்தி வம்பளந்தாங்க. ஐயோ! அவங்க ஒரு பாவமும் அறிய மாட்டாங்க. மகாமானின்னு அவுங்களுக்குத்தான் தகும். அவங்கமேலே கட்டுக் கதை கட்டி விட்டாங்களே! அவங்க நாக்கு இத்தூத்தான் பூடும்..........இந்த அம்மா இப்படிக் கிணற்றிலே விழுந்திறந்தது தனக்கு வந்த அவமானத்தைப் பொறுக்கமாட்டாமே தானுன்னு நினைக்கிறேன்!" என்று சாதுரியமாகப் பேசினாள்.

அம்பலவாணன் அவளுக்கு அநுதாபமாகப் பேசுவதுபோலவே பேசி மங்களத்தாய்ச்சி நடமாடுமிட மெல்லாவற்றையும் பார்வையிட்டுக் கடைசியாகப் படுக்கை யறையை யடைந்து கண்ணாலேயே ஆராயலானான். தலையணையின் கீழே ஏதோ ஒரு வஸ்து இருப்பது அவன் கண்களுக்குப் பட்டது. அவன் அம்புஜத்தினிடம் பேச்சு கொடுத்துக் கொண்டே அதனருகே சென்று மெல்ல அதைக் கையிலெடுத்தான். அது எழுதப்பட்ட காகிதமாயிருப்பதைக் கண்டு பதைபதைப்போடு அவன்

அதைப் பிரித்துப் படிக்கலானான். அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

"நான் கிணற்றில் விழுந்து இறந்ததைக் கண்டு யாரும் ஆச்சரியப்பட மாட்டார்களென்று நம்புகிறேன். நான் உணர்ச்சி வசப்பட்டு செய்த பாவத்திற்குத் தகுந்த தண்டனையாக இவ்விதம் தற்கொலை செய்து கொண்டேன். இவ்விஷயத்தில் போலீஸார் மற்ற யாரையுஞ் சந்தேகித்துத் தொந்தரவு செய்ய வேண்டிய அவசியமில்லை. ஆனால் ஒன்று மட்டும் அவர்களுக்குக் கூற விரும்புகிறேன். ஒரு சிறிதும் குற்றமில்லாத ஏழைச் சிறுபெண்ணை எனக்குப் பதிலாகப் பிடித்து நான் செய்த குற்றத்திற்காக அவளைத் தண்டனைக்குள்ளாக்கி அவள் வாழ்க்கையைப் பாழாக்கினார்களே! அதற்காகவே நான் மிகவும் வருந்துகிறேன். அவள் நிரபராதி என்பதை வெளியாக்கவே, நான் இப்போது தற்கொலை செய்து கொண்டேனே யொழிய ஊரார் பழிப்புக்குப் பயந்தல்ல. எனது இம் மரணத்தால் அவ் வேழைப் பெண்ணுக்கு விடுதலை யேற்படுமானால், அதுவே, பாபாத்மாவான எனக்குச் சாந்தியை அளிக்கும்."

இதைப் படித்ததும் அம்பலவாணன் முகம் மலர்ந்தது. "அம்புஜம், இதைப் பார்" என்று அக்கடிதத்தைத் தன் கையில் பிடித்தவாறே அவளிடம் காட்டினான். அம்புஜம் பரபரப்போடு அதை வாசிக்கலானாள். படித்து முடித்ததும் அவள் தேகம் உதறலெடுக்க ஆரம்பித்தது. கண்கள் பரக்கப்பரக்க விழிக்கலாயின. தான் சாதுரியமாக

இரகசியத்தைக் கடைசி வரை மறைக்க முயன்றும், தன் எஜமானி பட்டவர்த்தனமாக எழுதி வைத்து விட்டாளே என்று அறிந்ததும் அம்புஜத்தின் சர்வாங்கமும் கிடுகிடுத்தன. அவளது அப்போதைய நிலைமையைத் தன் காரியத்துக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளக் கருதிய அம்பலவாணன் அவளை நோக்கி, "அம்புஜம்! எனக்கு உங்கள் விஷயமெல்லாம் ஏற்கனவே தெரியும். இனியும் என்னிடம் ஒன்றும் மறைக்க முயலாதே. நான் கூறுகிறபடி நடந்தால் நீ தப்புவாய். இல்லாவிடில், எஜமானி செய்த சிசுஹத்தி குற்றத்துக்கு உடந்தையாக இருந்ததாக உன்மீது குற்றஞ் சாட்டப்படும். இதனால் உனக்கு மிகவும் தொந்தரவு ஏற்படும். என்ன சொல்கிறாய்?" என்று கூறிப் பயமுறுத்தினன்.

அம்புஜம் மிகவும் பீதியடைந்து, "எஜமான்! நான் பரம ஏழைங்க. ஒன்று மறியாதவ. நீங்க எப்பிடி உத்தரவிடறீங்களோ அப்பிடி நடக்கக் காத்திருக்கேன்........" என்று பரிதாபமாகக் கூறினள்.

"நீ வேறொன்றுஞ் செய்ய வேண்டியதில்லை. உன் எஜமானி எழுதியிருக்கிறாள் பார்; அதன்படி, அந்த ஏழைப் பெண் தனத்தை விடுவிக்க நீ உதவி புரியவேண்டும். நான் மேலதிகாரிகளுக்கு இது பற்றி எழுதப்போகிறேன். அவர்கள் ஒருவேளை விசாரணை நடத்தினல், நீ நடந்ததை நடந்தபடி ஒன்றும் ஒளியாமல் சொல்லி, தனம் நிரபராதி என்று சாட்சி கூறவேண்டும். அவ்வளவுதான்.—

இன்னுங் கொஞ்ச நேரத்திற்கெல்லாம் முனிசீப் முதலியவர்கள் வருவார்கள். நீ, நான் வந்தது; கடிதத்தை யெடுத்தது முதலியவற்றை ஒன்றுங் கூருதே! சாதாரணமாக உனக்கு எதுவும் தெரியாததுபோல் நடந்துகொள். இவர்களிடம் இவ்விஷயத்தைக் கூறினல் முட்டாள்தனமாக ஏதேனுஞ் செய்து சிக்கலை உண்டுபண்ணிக் காரியத்தைக் கெடுத்துவிடுவார்கள். அதனல் தான் ஒன்றுங் கூற வேண்டாமென்கிறேன்" என்று சொன்ஞன். அம்புஜமும் அப்படியே நடப்பதாக வாக்குறுதி யளித்தாள். அம்பலவாணன் அடுத்த கணமே, அவ்விடத்தை விட்டு அகன்று நேராகத் தபாலாபீசுக்குச் சென்ருன். தனக்குக் கிடைத்த ஆதாரத்தைச் சுருக்கமாக எழுதி உடனே தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், தான் அடுத்த ரயிலிலேயே புறப்பட்டு வருவதாகவும் தன் மாமனருக்குத் தந்தி யடித்துவிட்டு, வீடு திரும்பினன்.

---

## பதினன்காவது அதிகாரம்

"தனம்! தனம்!!..............."

"யாரது! என்னைப் பெயரிட்டு அழைப்பது; இங்கு யார்?"

"நான்....தான். தனம்!"

"யாரு! நான்தான? அது யார் நான்தான் என்பது?...." என்று இதுவரை கைகளைக் குத்திட்டு அதன்மீது தலையைக் கவிழ்த்து உட்கார்ந்திருந்த தனபாக்கியம் நிமிர்ந்து பார்த்

தாள். அவள் முகம் பயங்கரமாக வெளுத்திருந்தது. மிக மெலிந்து எலும்புந் தோலுமான காட்சி அவளைப் பைத்தியக்காரியோ என எண்ணும்படி செய்தது. எதிரே அம்பலவாணன் நின்றிருப்பதைக் கண்டதும் கவலை தேங்கி யிருந்த அவளது முகத்தில் இருள் சூழ்ந்தது. "யாரு நீயா? நீயா மீண்டும் வந்தாய்?..............." என்று ஆத்திரத்தோடு கேட்டாள். அது கர்ணகடூரமாக இடி இடிப்பது போலிருந்தது.

மீண்டும் அவள் பேசத்தொடங்கி, "நீ ஏன் மறுபடியும் வந்தாய்? எதற்காக இன்னும் என்னை வந்து இப்படித் தொந்தரவு செய்கிறாய்? உள்ளேயே வந்துவிட்டாயே! இந்தக் கதவை யார் திறந்து விட்டது?........ வர வரக் கிட்ட வருகிறாயே! ........" என்று ஆர்ப்பரிக்கலானாள்.

அம்பலவாணன் இவளது கோபப் பேச்சைக் கண்டு சிறிது பின்வாங்கினானாயினும், புன்சிரிப்போடு, "தனம்! ஆத்திரப்படாதே! சற்றுப் பொறு. நான் உனக்கு ஒரு பெரிய சந்தோஷ சமாச்சாரங் கொண்டு வந்திருக்கிறேன்........." என்று உரைத்தான்.

"சந்தோஷ சமாச்சாரமா? எனக்கா?...... ......சந்தோஷ சமாச்சாரம்; என்னை அந்தமானுக்கு அனுப்பப்போகிறார்கள் என்ற சந்தோஷச் செய்தியா?......ஹிஹி!...... சந்தோஷ சமாச்சாரம். சந்தோஷம்..." என்று கூறியவாறு கோப நகை நகைத்தாள்.

அம்பலவாணன் தனத்தருகே சென்று அவள் தோளைப் பிடித்து, "தனம்! இதோ பார், நீ அந்த மானுக்குப் போகக்கூடிய நிலைமை யேற்பட்டால், நானும் உன்னுடன் வரத் தீர்மானித்திருந்தேன். அதுதான் நான் உனக்கு இழைத்த தீமைக்குப் பரிகாரமாக இருக்குமென்று கருதினேன். அதிர்ஷ்ட வசமாகவோ, துரதிர்ஷ்ட வசமாகவோ அந் நிலைமை ஏற்படவில்லை. உன்னை விடுதலை செய்து விட்டார்கள். அச்சந்தோஷச் செய்தியைக் கூறி உன்னை அழைத்துச் செல்லவே வந்தேன்......" என்று ஆர்வத்தோடு கூறினான்.

"என்ன! நான் கேட்பதெல்லாம் உண்மையா? அல்லது கனவுதான் காண்கிறேனா?..ஐயா, என்னை மீண்டும் ஏமாற்றப் பசப்பு வார்த்தை கூறுகிறாயா? உண்மையைத்தான் சொல்கிறாயா? நிஜமாகச் சொல். எனக்கு விடுதலையா ?எனக்கா?என் பாழ்ப் பட்ட வாழ்க்கைக்கும் விடுதலை ஏற்படுமா?..." என்று அம்பலவாணனை நோக்கிச் சந்தேகத் தோடு கேட்டாள்.

அம்பலவாணன், " உண்மைதான், தனம். நான் கூறுவதனைத்தும் மெய்தான். இந்தச் சிறை யிலிருந்து மட்டுமல்ல உனக்கு விடுதலை! உனக் குப் பிதிரார்ஜித சொத்தாக இருந்த தரித்திர நிலைமையிலிருந்தும் உனக்கு விடுதலை ஏற்பட்டு விட்டது. இனி உனக்கு ஒரு குறைவுமில்லை. வா, உனக்கு எல்லா விஷயங்களையும் விவரமாகக் கூறு கிறேன்...உன் தாயார் உனக்காகக் காத்திருக்கி

ளுள்'' என்று கூறிக் கையைப் பிடித்து அழைத்து வந்தான்.

"என் தாயாரா? எங்கே இருக்கிறாள்? இங்கே வந்திருக்கிறாளா?........." என்று படபடப்போடு கேட்டுக்கொண்டே நாய்க்குட்டி போல அவன் பின்னேயே ஓடிவந்தாள். சிறையதிகாரி மரியாதையாக ஒதுங்கி நின்று இவர்களுக்கு வழி விட்டான். வெளியே நின்றிருந்த காரில் இருவரும் ஏறினர்.

"இப்போது நான் உன்னை உன் அன்னையிடம்தான் அழைத்துப் போகிறேன். உன்னைக் கண்டுதான் அவள் பைத்தியம் தெளியவேண்டும். அதற்குத் தகுந்தபடி சமயோசிதமாகவும் சமர்த்தாகவும் நடந்து கொள். இதுவரை நடந்ததையெல்லாம் மறந்துவிடு..........." என்று அம்பலவாணன் கூறினான்.

பிறகு அவன், தனபாக்கியத்துக்குத் தான் அவள் விஷயத்தைப் பத்திரிகையில் கண்டது முதல், இதுவரை செய்ததனைத்தையும் ஒன்று விடாமல் கூறினான். இவைகளைக் கவனமாகக் கேட்டுவந்த தனம் ஆச்சரியத்தால் பேசமுடியாது விம்மிதமுற்றாள். நன்றியறிதலும் அன்பும் அவளது கண்களில் ததும்பியது.

இதற்குள் கார் பூந்தமல்லி ஹைரோடிலுள்ள ஸர் கந்தசாமி முதலியார் பங்களாவினுள் நுழைந்து, மாளிகையின் முன் நின்றது. இருவரும் அவசர அவசரமாகக் காரினின்றும் இறங்கினார்கள். உடனே இவர்களது வருகைக்காக

காத்திருப்பதுபோல் காணப்பட்ட அம்பலவாணன் மனைவி, "வா அம்மா" எனக் கூறியவாறு தனத்தைக் கைலாகு கொடுத்து அழைத்துக்கொண்டு உள்ளே போனாள்.

அம்பலவாணன் தன் மாமனாரோடு பேசியவாறு, மேன்மாடிக்குச் சென்றான். அங்கே இவர்கள் வருகையை எதிர்பார்த்திருந்த டாக்டரொருவர் அம்பலவாணனை நோக்கி, "அந்தப் பெண் வந்துவிட்டாளா? அவளைக் கொண்டு கடைசியாக முயற்சி செய்து பார்ப்போம். நான் என்னென்னமோ செய்து பார்த்தும், பயனில்லாமற் போய்விட்டது........" என்றார்.

எல்லோருமாகப் பெருந்தேவி இருந்த அறைக்குள் சென்றனர். அவள் ஒரு படுக்கையில் கிடத்தப் பெற்றிருந்தாள். நர்ஸ் ஒருத்தி பக்கத்தில் அமர்ந்து அவளைக் கவனித்துக் கொண்டிருந்தாள். ஏதேதோ பிதற்றி எழுந்து குதித்துக்கொண்டிருந்த பெருந்தேவி, நர்ஸின் முயற்சியினால் சிறிது அமைதியாகப் படுத்திருந்தாள். அம்பலவாணன் அவளருகே சென்று, "அம்மா பெருந்தேவி; இதோ பார்! தனம்—உன் மகள்-வந்திருக்கிறாள்.... ..........." என்று கூறினான்.

"தனமா! எதோ!.... என் தனம்? அடி, தனம்! எங்கேடி போனே! உன்னை யாரடி பிடிச்சிண்டு போனா..........?" என்று கேட்டவண்ணம் துள்ளி எழுந்தாள்.

அதே சமயத்தில் தாமரைக்கண்ணியோடு குளித்துவிட்டுத் தலைவாரி நன்ருக உடுத்திக் கொண்டு உள்ளே வந்த தனபாக்கியம், "அம்மா! இதோ வந்துவிட்டேனே! இங்கே பார்! இருக்கி றேன்" என்று கூறியவண்ணம் ஓடிச் சென்று தாயைத் தழுவிக்கொண்டாள்.

"தனம்! தனம்!! வந்துட்டாயா? போலீஸ் காரனுங்க, உன்னை விட்டுட்டானுங்களா? பாவிங்க அவனுங்க நாசமாப் போக!......... வா அம்மா, தனம்! என் கண்ணு! என் கலி தீர்க்கவந்த கண்ணு! இனி என்னை வுட்டுட்டுப் போவமாட் டியே! நீ போறதாயிருந்தாலும் நான் உன்னை விட மாட்டேன், தெரியுமா?" எனப் பெருந்தேவி தனத்தை இறுகக் கட்டித் தழுவி உச்சி மோந் தாள். அவளைப் பலமுறை ஏற இறங்க நோக்கித் தேகத்தை ஆர்வமுடன் வருடலானுள்.

இக்காட்சி கன்னெஞ்சரையும் உருக்குவதா யிருந்தது. எனவே அம்பலவாணன் முதலியவர் களை, ஆனந்தக்கண்ணீர் வடிக்கச்செய்ததில் ஆச் சரியமென்ன இருக்கிறது! "இனிப் பைத்தியம் தெளிந்துவிடும்" என்று கூறி டாக்டர் வெளியேறி ஞர். மற்றவர்களும் தாயையும் மகளையும் தனியே விட்டு விட்டு டாக்டரைப் பின்பற்றினர்.

## பதினைந்தாவது அதிகாரம்

"தனம், என்னை மன்னிப்பாயா ......?"

"என்ன! உங்களை மன்னிப்பதா? நீங்களல் லவா என்னை மன்னிக்கவேண்டும்! என்ஞல் நீங்கள்

பட்ட கஷ்ட நஷ்டங்களுக்கும் என்னைத் தங்கள் பாதுகாப்பில் பராமரித்து வருவதற்கும் நான் என் தோலையே யல்லவா செருப்பாகத் தைத்து உதவ வேண்டும்?........"

"அதிருக்கட்டும்; நான் உன்னிடம் ஒரு வரம் கேட்கிறேன்........ என்னைப் பழைய அன்புடன் ஏற்றுக் கொள்வாயா?........" என்று தனத்தின் முன்னின்று கேட்டான் அம்பலவாணன்.

"உங்களை ஏற்றுக் கொள்வதா? விபரீதமாக இருக்கிறதே! ஒருவருக்குச் சொந்தமான உங்களை நான் ஏற்றுக் கொள்வதென்பது எவ்வாறு முடியும்?.................." என்று அச்சமும் ஆவலுந் தோன்றக் கூறினாள்.

"பரவாயில்லை தனம்! ஏற்கனவே, உனக்குச் சொந்தமாயிருந்த அவரைப் பின் நான் அடைந்திருக்க வில்லையா?.... பழைய சொந்தம் பாராட்டி நீ ஏற்றுக் கொள்வதில் தவறில்லை...." என்று கூறிக்கொண்டே தாமரைக்கண்ணி உள்ளே நுழைந்தாள். இதைக் கண்டு இருவருந் திடுக்கிட்டனர். தனம் அச்சத்தோடு ஒதுங்கி நின்றாள்.

தாமரைக்கண்ணி அன்பாகத் தனத்தின் கையைப் பற்றி யிழுத்து, "பழையபடி நீங்களிருவரும் காதலராவதில் எனக்கு யாதொரு தடையுமில்லை, தனம்! நீங்கள் இருவரும் காதலால் கட்டுண்டு மனமொருமித்து வாழ்ந்தால்தான் இல்லறம் இனிது நடைபெறும். உத்தம காதலர்களாகிய உங்களிருவருக்கும் குற்றேவல் செய்து வருவ

தையே நான் பெரும்பேருகக் கொண்டு வாழ்
வேன். உங்களிருவருக்கும் இடையூருக நான்
என்றும் இருக்கமாட்டேன் எனக் கடவுள் சாட்சி
யாக இன்று உறுதி கூறுகிறேன். அவர் மனதை
நான் நன்கறிவேன். முன்னர் அவர் உனக்
கிழைத்த தீங்கை மறக்கச் செய்து பழைய
அன்பை எப்படிப் பெறுவதென்று இத்தனை
நாளாகத் தவித்துக் கொண்டிருந்தார். முதலி
லேயே தன் விருப்பத்தை வெளியிட்டால் எங்கு
நீ இவ்விடத்தை விட்டுப் போய்விடுவாயோ என்று
அஞ்சியே, உன் போக்கின்படி தேசசேவையில்
ஈடுபடும்படி செய்து, உடனிருந்து உதவி புரிந்து
வருகிருர். நீ அவர் கண்களை மட்டுமல்ல; செல்வத்
திமிர் கொண்டிருந்த எங்கள்கண்களையும் விழிக்கச்
செய்தாய். ஆதலால் உன் தியாக வாழ்க்கைக்குப்
புத்தொளிக்க இதுவாயினுஞ் செய்யாவிடில்;
நான் பெருமைப் படத்தக்க பெண்ணினத்தைச்
சேர்ந்தவளாக மாட்டேன்" என்று கூறித்
தன் கணவன் கைகளோடு சேர்த்து இணைத்து
முத்தமீந்தாள். அன்புப் பெருக்கால் பிணைப்
புண்ட காதலர்கள் கரங்களை தாமரைக்கண்ணி
யின் ஆனந்தக் கண்ணீர் நனைத்தது.

முற்றுப்பெற்றது.